www.tamilarangam.net

புதுசு

PUTHUSU 1



PRICE Rs. 2,00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடக, அரங்கக் கல்லூரி

- 23-1-78 முதல் நாடகம் பற்றிய சகல பயிற்சிகளையும் இலவசமாக அளித்து வருகிறது.
- பயிற்சி பெற்றுப் பலன் கண்டவர் பலர்.
- இரண்டாவது பயிற்சி வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெற்று வருகிறது.
- நடிப்பு, நெறியாள்கை, பிரதி ஆக்கம், மேடை நிர்வாகம், ஒப்பனை, ஒளி அமைப்பு, உடை அமைப்பு, நாடக வரலாறு ஆகிய பல துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- 1979ல் நாடக ரசிகர் அவை ஒன்றினை அமைத்து உறுப்பினருக்கு தரமான ஆறு நாடகங்கள் நடித்துக் காண்பிக்கப்பட்டன.
- இரண்டாவது ரசிகர் அவை இப்பொழுது அமைக்கப்படுகிறது.
- நாடகப் பயிற்சி பெறவோ, ரசிகர் அவையில் உறுப்பினராகவோ விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

செயலாளர்,
நாடக, அரங்கக் கல்லூரி,
'தாயகம்'
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

"புதுசு"கள்

★ நிர்வாக ஆசிரியர்:
நா. சபேசன்

★ ஆசிரியர் குழு:
அளவாலை விஜயேந்திரன்
பாலசூரியன்
அளவெட்டி - அ. ரவி

★ புதுசுவில்:
துலங்கும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு.

★ முதலாவது ஆக்கம்:
தை-மாசி-பங்குனி 1980

★ விலை – ரூபா 1-75

★ அட்டை ஓவியம்:
அ. குலேந்திரன்

★ அச்சுப்பதிப்பு:
ஜெயாப்பிறின்டிங் வேக்ஸ்,
அளவெட்டி

★ தொடர்புக்கு:
நா. சபேசன்

"அறிவகம்"
பாவலர் துரையப்பாபிள்ளைவீதி,
அம்பனை,
தெல்லிப்பழை.
இலங்கை

-முன்வைப்புக்கள்-

நாங்கள் யார்?

★ ஈழத்து இலக்கியம் ஆரோக்கியமான சூழ்நிலையில் இருக்கிறது என்ற ஒரு சிறிய வட்டத்தினது போலிமாயையினை நிரந்தரமாக நிதர்சனமாக்க எண்ணி நாங்கள் இப்பணிக்குள் கால்களை இறக்கியிருக்கிறோம்.

★ ஈழத்து இலக்கியத்தின் தரமான பரப்புக்களை அதிகரிக்கவும்; அதிகரிக்கும் எண்ணத்தில் முயலும் ஏனையோருக்கு தோள் கொடுக்கவும் முன்நிற்கிறோம்.

★ பொருளாதார நிலையில் நட்டமடைந்து நாம் "புதுசு"வை வெளிக்கொணர்கிறோம். எனும் நினைப்பு "புதுசு"விற்கு பணங்கொடுப்போர் மனதில், கொள்ளவேண்டும் என்பது எமது விருப்பம்.

★ நாம் நீண்டகால அனுபவம் கொண்டவர்கள் அல்லர். இப்போதுதான் எங்களுக்கு கல்லூரி வாழ்வின் உச்சக்கட்டம்.

★ எத்தனை இதழ்கள் தரப்போகிறோம்—என்னதரத்தில் தந்திருக்கிறோம் என்பதே வரலாற்றில் எங்களுடைய இடத்தைத் தீர்மானிக்கும் என்பதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை.

www.tamilarangam.net

பசுந்துளிர் ___ அ. செ. மு.

ஈழநாடு வாரமலரில் வாராந்த சுவை அம்சம் எழுதி வாசக நேயர்களை மகிழ்வித்து வந்த அ. செ. மு. பத்தாண்டுகளுக்கு முன் ''பசுந்துளிர்' என்று மகுடமிட்டு ஒரு வாரம் எழுதியதையே இங்கு நம் முதல் இதழில் நாம் முதன்மைச் சங்கு முழங்கி ஏத்தும் அரிதானதொரு சிறு கதையாக நன்றியுணர்வுடனே இங்கு தருகிறோம். நோயுற்றிருப்பதால் இன்றைக்கெல்லாம் சில காலமாக அவர் பேனாவுக்கு ஓய்வு.

— புதுசுகள் —

''காக்கா காக்கா ஒரு கதை சொல்லு.''

தினமும் மதிய போசனத்தின்போது ஒரு பிடி சோற்றுக்காக வந்துகூடும் காக்கை விருந்தாளிகளில் ஒன்றைப் பார்த்துத்தான் ஒரு தினம் கேட்டேன்.

காக்கை வாய்திறக்கவில்லை.

''காக்கா கருங்கண்ணி! நாவற்பழம் தின்னி எனக்கொரு கதை சொல்லமாட்டாயா? பாட்டி பாட்டன்மார் புத்திசாலிக் காக்கை என்று உன்னைப் புகழ்ந்தும் ஏமாளிக் காக்கை என்று இகழ்ந்தும் நல்ல நல்ல உபகதைகள் எவ்வளவோ சொல்வார்களே. அப்படியெல்லாம் கதாபாத்திரமாகியிருக்கும் உனக்கு ஒரு கதை சொல்லத் தெரியாதா''? காக்கையார் எழுந்தோடிப் போய்விடாதபடி இதமாகத் தடவிக் கொடுப்பதுபோல் நான் கையில்வைத்துத் தின்றுகொண்டிருந்த முறுக்கிலே ஒரு துண்டு உடைத்துப் போட்டுவிட்டுக் கேட்டேன். அது புத்தியுள்ள காக்கையாக இருக்கவேண்டும். அதனால் என் புகழ்ச்சியிலே லயித்துப் போய் விடாமல் எனக்குக் கதை சொல்லுமுன்பாக தன் வருங்கால ஜீவனுப்சத்தையும் கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளும் கருத்துடனே என்னைப் பார்த்து ''ஒரு நல்ல கதை சொல்லுகிறேன். அந்தக் கதையை நீ என்ன செய்வாய்'' என்று கேட்டது.

''நீ சொல்லப்போகிற கதையை உடனே பத்திரிகைக்கு எழுதி அனுப்பிவிடுவேன்'' என்றேன்.

''பத்திரிகைக்காரர்கள் அதை என்ன செய்வார்கள்'' காக்கையார் கேட்டார்.

''என் கையெழுத்து காக்காய் என்னவோ கிளறியது மாதிரி இல்லாமல் சுத்தமாகத் தெளிவாய் இருந்தால் பத்திரிகை ஆசிரியர் அதனை வாசித்துப் பார்ப்பார்.''

''அதன் பின் .?'' அப்படியும் இப்படியுமாகத் தலையைத் திருப்பிக்கொண்டே காக்கையார் வினவினார்.

''அதன்பின் கதை அவர் மனதுக்குப் பிடித்திருந்தால் பத்திரிகையிலே பிரசுரம்செய்வார்''

''அதனால்?'' - கர்க்கையாரின் ஒவ்வொரு கேள்வியும் வெடுக்கு வெடுக்கென்று என்னை மோதின. நான் பொறுமையிழக்காமலே பதிலளித்தேன்.

''பத்திரிகையிலே கதை பிரசுரமானால் அப்பொழுது பலபேர் பறந்தடித்துக் கொண்டு அதனை வாசித்துப் பார்ப்பார்கள்.''

''யார் யாரெல்லாம் வாசிப்பார்கள்?''

''எவ்வளவோ பேர் வாசிப்பார்கள். அதோ அந்த வாசிகசாலையில்வந்து கூடுகிறார்களே அவர்கள் முழுப்பேரும் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு வாசிப்பார்கள். நாங்கள் பள்ளிக்கூட மாணுக்கர்களாயிருந்த நாளில் ஊரிலே ஒவ்வொரு வீட்டிலும் பிடி அரிசி சேர்த்து அந்தஅரிசி விற்றகாசுக்குப் பேப்பர் வாங்கிப்போட்டு வளர்த்த படிப்பக இயக்கம் அது''-

'எதற்காகப் பறந்தடிக்க வேணும்? அச்சடிக்கிறதாள் சர்க்கரை மாதிரி இனிக்குமா?''

''சே சே இலக்கிய ரசிகர்களைப் பற்றி அப்படியெல்லாம் உன்னைப் போல நினைக்காதே. பத்திரிகையிலே அச்சாகி வந்திருக்கும் கதைதான் அவர்களுக்கு சர்க்கரை மாதிரி இனிக்கும். கதை சொல்லப்படும் தமிழோ கற்கண்டாகத் தித்திக்கும், கடதாசியை வீசிவிடுவார்கள். உனக்குச் சில சமயம் கூடுகட்ட உதவுவது அந்தக் கடதாசி தான்.''

''ஆனால் நான் சொல்லப்போவது சோகக்கதை''- காக்கையாரின் குரல் கம்மியது

''அதனாலென்ன, அதையும் கூட நா இனிக்க இனிக்க நன்றாகச் சுவைத்தே படிப்பார்கள்'' என்றேன்.

''அதிசயமான படிப்பு! மனிதர்களே விந்தையான படைப்பு! என் இனத்தவருக்குள்ளே நேற்று ஒரு சாவு. பரிதாபமான சாவு. கண்ணுக்கு முன்னாலே துடிதுடித்துப் பதைத்து மாண்ட கொடுமை '' காக்கையாரின் கண்களில் நீர் துளிர்த்தது.

''ஓகோ, அதுதானே பார்த்தேன் நேற்று மத்தியானம் இந்

www.tamilarangam.net

தப் பக்கத்திலேயே உங்களில் யாரையும் காணோமே என்ன சங்கதி ஏது சம்பவித்ததோ எங்கேயாவது வெடிகுண்டோ எறிகுண்டோ அல்லது பட்டாஸ் தானும் வெடித்துச் சத்தம்என் காதில் விழவில்லையே என்றெல்லாம் பல பல எண்ணினேன்.''

''என்ன சம்பவித்தாலும் இந்த உலகிலிருந்து நாம் அறவே ஒழிந்துபோய்விட மாட்டோம். ஏன் யப்பான்காரன் கூடத்தான் இரண்டு தடவை வெடிகுண்டு போட்டுப் பார்த்தானே. உனக்கும் நினைவிருக்குமே அது?''

''பின்னே, மறந்துபோய் விடுமா என்ன? ஆனால் அதையெல்லாம் எதற்காக ஞாபகப்படுத்திக்கொண்டு வீணாக மனத்தை அலட்டிக்கொள்கிறீர். காக்கையாரே? அந்தக் கோரத்தை நானும் என் கண்களால் பார்தேனே இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சம் துணுக்குறும். அப்பப்பா என்ன பயங்கரம் அது! தலைமேல் கை வைத்துக்கொண்டு வீட்டு மூலைக்குஓடி பெட்டி அடுக்குகளுள்ளேயும் படுக்கைக் கட்டில்களின் கீழும் பதுங்கியவர்களும், கடவுளைத் துதித்துக் கொண்டு பாதுகாப்புக் குழிக்குள்ளே ஓடி ஒளித்தவர்களும் - ஊரெங்கும் ஒரே கூக்குரலாகிப் போச்சே. உன் இனசனத்தாரோ வெடிகுண்டுச் சத்தம் - கேட்ட மாத்திரத்தே அங்கங்கு இருந்தபடி - பறந்தபடி பொத்துப் பொத்தென்று செத்து விழுந்தார்கள். என்ன அக்கிரமம்! என் நெஞ்சுத்துடிப்பு நிற்பதற்கு எத்தனை நாள் ஆயிற்று காக்கை யாரே!''

''அதுதான் அந்த அக்கிரமக்காரருக்கெல்லாம் அன்றைக்கே சனியன் பிடிச்சது மாதிரி அவர்கள் உயர்த்திய போர்க்கொடியின் கதை முடிந்ததே.''

'யுத்தத்திலே ஒருவேளை ஜெயித்திருந்தால் ஆயிரம் பத்தாயிரம் காக்கைகளைக் கொன்ற வீரர்கள் என்று யப்பானிய விமானிகள் பரணி விருதுபிரதாபம் பெற்றிருப்பார்கள்! காக்கையாரே உன் முகத்தைப் பார்த்தால் என் கையிலிருந்து அப்பத்தைப் பறித்துக்கொண்டு தலையிலே குட்டி முகத்திலே பிருண்டி நாள்தோறும் அப்படிபழகி பரிச்சயமான அதே பழைய காக்கையாகத்தான்தோன்றுகிறீர். என் சிறு வயதில் முகத்தில் பதிந்துவிட்ட தழும்பு இதோ இன்னமும் இருக்கிறது. அது உன் கண்களுக்குத் தெரிகிறதா? காக்கைக்குலம் சிரஞ்சீவியாக உயிர் வாழ்வதைப் போல எத்தித் திருடும் உங்கள் பழக்கமும் என்றைக்கும் நிலை பெற்றிருக்கிறது போலும். என்னவானாலும் மனிதருக்கும் உங்களுக்கும் உள்ள உறவு இப்படி அழியா உறவாக வாழ்நாள் முழுக்கவும்நீடிக்கிறதே! பொழுது விடிகிறபோதே காக்கையார் குரல் கேட்டுத்தானே கண் விழிக்கிறோம். தோட்டத்திலும், வயலிலும், தெருவிலும், சந்தையிலும். கல்யாணத்திலும், சாவிலும் வாசலில், முற்றத்தில், வீட்

டினுள்ளே கூட தினமும் பார்த்துப் பழகிய முகம்; கேட்டுப்பழகிய குரல். அவ்வித நெருங்கிய நீடித்த பழக்க தோஷத்தினால் தான் போலும் மனிதன் பிணமாகி விழுந்தபோது அவனைச்சுற்றிக் கூடி அவன் உடலைத் தொட்டுத் தழுவி அவனுக்கு கடைசி அஞ்சலி செலுத்துகிறீர்கள். சுடுகாடுவரை பின்தொடர்ந்துவந்து பிணத்தையும்கூட நெஞ்சார உகப்பீர்கள்!

வாய்க்குள்ளே ஒரு குறுஞ்சிரிப்பு அரும்பக் காக்கையார் என்னைக் கூர்மையாக அவதானித்தவராய் ''ஒரு தடவை தான் நரியாரிடம் ஏமார்ந்தோம். அந்தக் கதை உலகப் பிரசித்தியாகி நாம் எல்லாம் ஏமாந்த காக்கைகள் என்று பரிகாசத்துக்கிடமாகி விட்டோம். இனிமேல் அப்படி நடக்காது. உண்மையைச் சொல்லு நான் சொல்லப்போகும் கதையை நீ பேப்பருக்கு எழுதிக் கொடுத்தால் அதற்கு உனக்கு எவ்வளவு சன்மானம் தருவார்கள்?'' என்று கேட்டார்.

'ஏதோ கொடுப்பார்கள் உசிதம்போல். கடைசி பதினைந்து ரூபாய் என்று வைத்துக்கொள்ளேன்'' என்றேன்.

''சரி அப்படியானால் அந்தப் பணத்தில் எங்களுக்கு எவ்வளவு செலவிடப் போகிறாய்?'' காக்கையார் சட்டென்று இப்படிக் கேட்டுமடக்கியதில் நான் திகைப்படைந்தவனாய் ''சரி அதற்கென்ன ஒரு நாளைக்கு உங்களுக்கெல்லாம் கல்யாண விருந்தாக ஒரு விருந்து போடுகிறேன். அது தவிர தினமும் ஒரு பிடி சோறு மதியவேளை அன்னதானம் வழக்கம் போல் நடக்கும். சம்மதந்தானே காக்கையாரே?'' என்றேன்.

காக்கையார் தலையசைத்து சம்மதம் தெரிவித்தவராய் அதன் பின் கதையைக் கூறலுற்றார். அது ஒரு சின்னக் கதைதான் என்றாலும் நல்ல கதை. துயரமான கதை. அதனை இந்நாளில் வெளிவரும் சிறுகதை வடிவமைப்பில் ஜோடித்து உருப்படுத்திச் சொல்லலாம். சொன்னால்.. அது பின்வருமாறு அமையும்.

★ ★ ★

யப்பான்காரனின் போர் விமானங்கள் நூறு ஆயிரமாகச் சேர்ந்து வந்து செவி கிழிய வெடிகுண்டுகளை வீசிக் காக்கை குருவிகளைக் கதிகலக்கி ஆயிரமாயிரம் உயிரைப் பலிவாங்கியதைப்போல விஞ்ஞான யுகத்தின் ஒரு பொல்லாக் கொடுமை என்று சொல்லவேண்டும். ஊரெங்கும் மின்சாரவசதி அளிப்பதற்கென்று தொடங்கப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டம் இலட்சிய சித்தி கண்டு அக்கிராமம் இப்பொழுது எங்கும் இருளை ஓட்டி, ஒளியினைப் பரப்பி நிற்கிறது. நெடுந்தூர வினியோகத்திற்கென்று மின் சக்தியைத் திரட்டிச் சேமித்து வைக்கும் மின்வாங்கியொன்று அந்தக்கிராமத்தில் தெருவோரமாக ஓரிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் கம்பிவேலி போட்டு அபாய அறிவித்தலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரசித்தம் செய்யப்பட்டிருந்தது. அந்த அபாய காந்தக் கூடானது மின்சார இயக்க தொழில் நுட்ப வல்லுனர்களின் தேர்வுப்படி ஒரு வீட்டுத் தெரு வாசலோடு சேர்ந்தாற்போல அதற்குப் பக்கத்தே இடம் பெற்றுவிட்டது. அந்த வீட்டில் பள்ளிப் பிராயத்தினராக மூன்று சிறுவர்கள் தினமும் காலையிலே அப்பம், பிட்டு, தோசை என்று ஏதாவது ஆகாரம் உண்ணும்போதெல்லாம் அவர்கள் முன்னே வீட்டுவாசல் முற்றத்தில் கூடும் காக்கை கோழிகளுக்கும் கிள்ளி அள்ளிப் போட்டு அவைகள் பறந்தடிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டே சாப்பிடுவார்கள். தித்திப்புப் பட்சணங்கள் சாப்பிட்டபோதும் இது நடைபெறும். வீட்டுவாசலில் நின்று பார்த்தால் தெரியும் அவ்வூர் கோயிலின் கோபுரத்தில் வசிக்கும் கோவில் புருக்களும் சில தினங்கள் அவ்வீட்டு வாசலுக்குப் பறந்து வரும். புருக்களைப் பார்த்து விட்டால் சிறுவர்களுக்கு கரைகடந்த மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமாகிவிடும். வீட்டுக்குள்ளே ஓடிச் சென்று தானியங்களை அள்ளிக் கொணர்ந்து போட்டி போடும் காக்கையையும், கோழியையும் அப்பாற் துரத்திவிட்டு புருக்களுக்குப் போடுவார்கள். அவைமிரண்டு வெகுண்டு நின்று தானியம் பொறுக்குவதை ஆசையாக வேடிக்கை பார்ப்பார்கள். ஒரு நாள்காலை சிறுவர்கள் பள்ளிக்குச் செல்ல ஆயத்தமானார்கள். உமூக்கமாகக் காக்கைக்கும் கோழிக்கும் கிள்ளி அள்ளிப்போட்டு கீழே பாதி மேலே பாதியாக பரக்கப் பரக்க அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது அவர்கள் தாய் குரல் வைத்துக் கூப்பிட்டுக் கொண்டே உள் வாசல்படியில் வந்து நின்று "அடா பயல்களா, இன்றைக்குப் பள்ளிக்கூடம் மூடியாச்சாம். சபாரத்தின வாத்தியார் செத்துப்போனாராம் அடுத்தவீட்டு ஆறுமுகம், சிவக்கொழுந்து ஒருவருமே போகவில்லை. நீங்களும் போகவேண்டாம்," என்றாள்.

பள்ளிக்கூடம் இல்லை என்று சொல்லக்கேட்ட மாத்திரத்தே அச்சிறுவர்களில் ஒரு பயலுக்கு அப்பொழுது உண்டான மனமகிழ்ச்சியில் தட்டில் வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த தோசையில் பெரிதாக ஒரு பாதி பிய்த்து காக்கைகளுக்கு வீசிவிட்டான். காக்கைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுப் பறந்தடித்தன. சிறுவர்கள் அதைப் பார்த்துக் கூச்சல் போட்டு ஆரவாரம் செய்தபோது, அட்டமிச் சந்திரன் வடிவினதான பாதித் தோசை பல சிறு துண்டுகளாகி காக்கைகளின் வாய் இடுக்கினுள் சிக்கிக்கொண்டன. இரண்டுகாக்கைகள் விர்ரென்று மேலே தாவி காந்தக்கூட்டில் பொருத்திய உச்சக்கம்பத்தில் அதற்குக் குறுக்கே ஓடிய கம்பிகள் ஒன்றில் அமர்ந்தன. வாயில் கௌவி வைத்திருந்த ஆகாரத்தை கால் நகங்களின் இடுக்கில் வசதியாக வைத்துப் பிடித்துக்கொண்டே

இரண்டு காக்கைகளும் தலைகுனிந்து அதில் ஒவ்வொருகொத்துக் கொத்தின. அந்தமாத்திரத்தே இரண்டு காக்கைகளும் படாரெனச் சுருண்டு கீழே வீழ்ந்து காக்கைவலிகண்டு துடிப்பது போல் கால்கள்மடங்கி கண்கள் சொருகி இறக்கைகள் படபடவென்று அடித்துக்கொள்ள தரையில் புரண்டு துடித்தன. இரண்டும் நேரே கம்பிக்கூட்டுக்குள்ளாக வீழ்ந்துகிடந்ததினால் அங்கு ஓடிவந்த சிறுவர்கள் உள்ளே நுழையமாட்டாமல் கம்பிக்காப்பிட்ட வேலியுடனே நின்று பரிதாபமாகப் பார்த்தார்கள். அவர்களின் தலைக்குமேல் பல காகங்கள் வட்டம் சுற்றிப் பறந்து பறந்து கத்தி அழுதன.

சிறுவர்களில் ஒருவன், "நீதானேடா காக்கைக்குத்தோசை போட்டாய்! நீ போட்ட தோசையை வாயிலே கொத்திக்கொண்டு போய் கம்பியிலே உட்கார்ந்ததால்தானே அதுக்கு காந்தமடிச்சுது" என்று மற்றவன் மேல் குற்றம் சுமத்தினான். அதற்கு மற்றவன் "போடாபேயா நான் மட்டும்தானா போட்டேன் எல்லாரும்தான் போட்டோம்" என்று தன்மேல் சுமத்தப்பட்ட பழிபாவத்தை எல்லோருக்கும் பகிர்ந்தளித்தான்.

அவர்களில் மற்றொரு சிறுவன் கம்பிவேலியை மருவினாற்போல நிலத்தில் குந்திவிட்டான். ஆட்டுக்குத்தீனியாகக் கொண்டு வந்து போட்டிருந்த பூவரசுக் குழைக்கட்டில் கைநீட்டி ஒருதடியை உருவி இழுத்து இலைகளைப் பிடுங்கிப்போட்டு விட்டுத்தடியை கம்பிகளினூடாக உள்ளே நீட்டி கைக்கு எட்டிய தூரத்தில் வீழ்ந்துகிடந்த ஒரு காக்கையைத் தடியினால் தொட்டு நோண்டினான். மற்றக்காக்கை கைக்கும் தடிக்கும் எட்டாத்தூரமாக வீழ்ந்துகிடந்தது அத்துடன், மின்தாங்கியின் அபாய சிவப்பு எழுத்து அறிவித்தல் ஒவ்வொரு நிமிடமும் அவர்களை எச்சரிக்கை செய்துகொண்டிருந்தது. "பாவம், மூட்டாள் காக்கைகள் பள்ளிக்கூடம்போய் ஓர் எழுத்தாவது படித்திருந்தால் இந்த சிவப்பெழுத்து அறிவித்தலை வாசித்துப்பார்த்தாவது உயிர் தப்பியிருக்கலாமே!" என்று ஒருசிறுவன் கூறி அனுதாபப்பட்டபோது இன்னொருவன் "இன்றைக்குத்தான் பள்ளிக்கூடம் இல்லையேடா!" என்று அதற்கு விடை பகர்ந்தான். "சத்தம் போடாதீங்களடா அம்மா காதிலே எங்கள் பேச்சுக்கேட்டால் குரல் வைப்பா" என்று அவர்களில் வயதுக்கிளைய கடைக்குட்டித் தம்பியைக் கடிந்து அவன் காதில் நிமிண்டி விட்டுக் கம்பிக்கூட்டுக்குள்ளே தடியை விட்டு கார்க்கையைத் தொட்டு அதன் இறக்கைமேல் தடியால் தடவிக்கொண்டிருந்த மூத்தவன், அசைவற்றுக்கிடந்த காக்கை அசைந்துஅதன் சுருண்டுபோன கால்நகங்கள் பச்சைத்தடியைப் பற்றிக்கொள்ள தடியின்மேல் அது எழுந்து நிற்க அதைக்கண்டு அதிசயமடைந்தான். சோர்ந்து தயங்கி தடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின்மேல் ஏறி உட்கார்ந்திருந்த காக்கையை மெல்ல வெளியே கொணர்ந்ததும் ஒரு சிறுவன் ஓடிப் போய் தண்ணீர் கொணர்ந்து அதன்மேல் தெளிக்க, காந்தமடிச்சு வீழ்ந்த காக்கையார் எழுந்து மெல்லத் தத்தித் தத்தி நடக்கலானார்.

பச்சைத்தடி மந்திரக்கோலாகவும் மூத்தவன் பெரியதொரு மந்திரவாதியாகவும் மற்றிரு சிறுவர்களின் பார்வையில் உயர்ந்து நின்றனர்.

ளுக்கு எட்டாத் தூரமாக வீழ்ந்து கிடந்ததனால் அதனை அணுக முடியாதிருந்தது. அதனால் அது அப்படியே கிடந்து செத்துப் போய்விட்டது.

காக்கையார் கூறிய சோகக் கதை இதுதான். காக்கையார் கதையைக் கூறி முடித்தபோது "ஆனால் இது முழுக்கவும் சோகக் கதை என்று சொல்வதற்கில்லையே. செத்துப் பிழைத்த சந்தோஷமும் கலந்திருக்கிறதே!" என்றேன்.

செண்பக இதயங்கள் எரிகையில்

பா. செயப்பிரகாசம்

அர்த்த ஜாம நட்சத்திரத்தூசியாய்
அர்த்தங்கள் விதைக்கும் — வார்த்தை
அம்மன் கொண்டாடிகள் — அவர்
கைவிரல் தொட்ட ஞான உடுக்கையில்
கால கீதங்கள் — உதிரும்
கால கீதங்கள்.

சேரி மனசுகள் சிந்திய கண்ணீரில்
சிற்றின்ப வானவில்கள் — செல்வரின்
சீதள யாத்திரைகள் — இன்று
எழுத்துக் கிளிகளின் செண்பக இதயம்
எரிதழல் நகலாகி — நாளை
இன்ப சரித்திரங்கள்.

நன்றி: வானம்பாடி — 10

யார் தோசை போட்டதினால் காக்கைக்கு காந்தமடிச்சு பழிபாவத்துக்குள்ளானார்கள் என்ற பொல்லாப்பு பாதி விட்டு நீங்கியதாக மூன்று சிறுவர்களுக்கும் மனத்துக்குள்ளாக ஒரு "புளுகம்".

மற்றக் காக்கையை சிறுவர்கள் காப்பாற்ற முடியவில்லை. அது கம்பிவேலிக்குள்ளே அவர்க

காக்கையார் இதற்குமேலும் என்பேச்சுக்கு காது கொடுக்க விருப்பமற்றவராகி "அதோ குயில் கூவுகிறதைக் கேட்டாயா? சனியன் மறுபடியும் என் கூட்டுப்பக்கம் வந்து சுற்றத்தொடங்கிவிட்டது. இப்பொழுதே போய் குட்டிக்கலைக்க வேணும். எங்கே இன்னும் கொஞ்சம் முறுக்குக் கொடேன். நான்போகவேண்டுமே" என்றது.

ஒரு துண்டு முறுக்கை உடைத்து அதன்முன் வீசியதும் பாய்ந்து அதனைக் கொத்திக்கவ்வி எடுத்துக்கொண்டு பறந்தோடிப் போயிற்று. எழுந்து தெருவாயிலுக்கு நடந்தேன்.

ஒரு பஸ் தெருவோரமாக வந்து நின்றது. கிராமத்துச்சாலையிலே சில மாதங்கள் முன்னதாகத்தான் நடைபெறத் தொடங்கிய புதியபோக்குவரத்து சேவை. அடுத்த, மற்ற கிராமங்களுக்கும் பட்டணத்துக்கும் நினைத்தவுடனே போகவும் போய் போனகாரியம் முடித்துக் கொண்டு உடனே திரும்பவும் ஊர்மக்களுக்கு இந்தசேவை பலவிதத்தில் சவுகரியமாய் இருந்தது.

பாதை ஓரமாக மரங்களின் நிழலில் அதற்குரிய தரிப்புலாயத்திற்கு ஒதுங்கி ஒரு நிமிடம் தரித்து நின்று ஆட்களை இறக்கி ஏற்றி ஆசனங்களை நிரப்பிக் கொண்டு அதற்குமேல் தன்நாலு கால் பாய்ச்சலைத் தொடர மூர்க்கம் கொண்டு மீண்டும் மூச்செடுத்தது. அதன்மேல் தட்டின் கூரை மரங்களின் கிளைகளை மருவும். தெருவேலிக்கு அப்பால் எவரோ ஒருவரின் காணிக்குள் நின்ற மாவும், பலாவும் பஸ்ஸின் திருமேனியை அவ்விதம் பசுமையாகத் தொட்டுத் தீண்டும்படி சிலகிளைகளை தெருப்பக்கமாக நீட்டி நின்றது.

பஸ் நகர்ந்து இலைகளையும் குழைகளையும் தடவிக்கொண்டு மெல்ல உருண்டபோது மாமரத்தில் கிளைக்குக் கிளை தாவி காயும் கனியும் சுவைத்துஓடிவிளையாடிய அணிற்பிள்ளை ஒன்று அதன் பற்றுக்கோடு வழுவி பஸ்ஸின்மேல் தட்டுயன்னலூடாக உள்ளே நழுவி வீழ்ந்தது. அணிற்பிள்ளையின் இந்த அவலம் பிரயாணிகள் கொலு அமர்ந்திருக்கும் பேரவைக்கண் அவர்தம் உளப்பாங்கில் ஒரு நெகிழ்ச்சியையும் கிளுகிளுப்பையும் ஏற்படுத்தி அதுவே ஓர் அக்களிப்பும் உணர்ச்சிக் கொந்தளிப்புமாக அலையடித்து மெல்ல அடங்கிற்று. அணிற்பிள்ளை அங்கிருந்து தப்பி ஓட வழியும், தருணமும் பார்த்து அங்குமிங்குமாய் ஓடித்திரிந்தது.

பேரூர்தி இடம்பெயர்ந்து பெரிதாக ஊர்ந்து அடுத்த தரிப்புலயம் சேர்ந்து ஆங்கொரு நிமிடம்கால் கொள்ள, அம்மட்டில் கட்டணம்செலுத்தாமே தம் இலவச பயணத்தை முடித்தார் போல் அணிற்பிள்ளையார் வெளியேபாய்ந்து மற்றொரு மரத்துக்குத் தாவினார்-தப்பி ஓடினார்.

எதிர் வீட்டு வாசலிலே பொல்லூன்றி நின்ற கிழவனார் பஸ்விட்டிறங்கி வந்த சிறுவர்தம் முகம் நோக்கி 'எங்கு போய் வருகிறீர்கள் பிள்ளைகள்?' என அன்பாக வினவுவார்.

நீண்டகாலக் கொழும்பு வாசத்தின்பின் பள்ளிநாள் கோடைவிடுமுறை கழிக்க கிராமம் திரும்பியிருக்கும் சிறுவர்கள் அவர்கள்.

'கீரிமலைக்குப் போனோம் தாத்தா. நீராடிவிட்டு தொழிற்

www.tamilarangam.net

சாலையையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

முதியவருடனே கலந்துரையாடி மகிழும் இளங்கதிர் செல்வர். அவர்தம் குதலை மொழி கேட்டு இன்புறும் தாத்தா.

பஸ்ஸில் நடந்ததை முதியவரிடம் கூறி துதித்த பிள்ளைகள் நீருற்றாடி வந்த புத்துணர்ச்சியுடனே கிழவனார் கூட அங்கு நின்றே அதன்மேலும் சிலவேளை கலந்து மகிழ்ந்து குலவுவர்.

இங்கெல்லாம் முன்புநின்ற நிழல் மரங்களைக் காணோமே தாத்தா. என்னவோ நாற்றமடித்து மூக்கைப் பிடுங்கிறதே சுற்றுமுற்றும் தேடும் நோக்கினராய் மூக்கைப்பிடித்து நிற்கும் சிறாரிடம்.

நூற்றுக்கணக்கான நிழல் மரங்களை வெட்டிச் சாய்த்து விட்டார்கள் நிழல்மரங்கள் நின்ற இடத்திலேதான் ஒளிதரும் மின் தந்தி மரங்களை பார்க்கிறீர்கள், பிள்ளைகள்.

எல்லா நாளும் எல்லா மரங்களிலும் போய் குந்தும். வழக்கமாகப் பறவையார் இந்த நச்சு மரத்துக்கும் தாவியிருக்கிறார். அதனால் காந்தம் பாய்ந்து செத்துப்போய்க் கிடக்கிறார். அதோ!'' என்று காண்பித்த போது, சிறுவர் ஓடிப்போய் செத்துக்கிடந்த பறவையைக் கையில் தூக்கிப் பார்த்துவிட்டு 'மாங்குயில் புள்ளிக் குயில் தாத்தா. இதன் நாற்றம் தான் இங்கெல்லாம் வீசி நம் மூக்கைப் பிடுங்கியது. எங்கேயாவது தூரத்தே கொண்டுபோய் வீசிவிடுவோம்' என்பர். அப்படியே செய்யுங்கள்.

'நிழல் மரங்களிலே கிளைக்கு கிளை தாவி இராப் பகலாகக் கூவி கானம்பாடி மாந்தர்தம் செவியாரத் தேன்வார்த்த இனிய பறவையல்லவா தாத்தா. அதன் உடல் இப்படி நாற்றமடிக்கக் கூடாது. கொண்டு போய் குழிதோண்டிப் புதைத்து விடுவோம்'

'ஓமோம், அப்படியும் செய்யலாம், செய்யவேண்டியதுதான் செய்யுங்கள்'.

காக்கைகள் கூட்டம் கூடி மாங்குயிலைக் குட்டிக் கலைத்திருக்கும். அதனால் தான் குயில்பிள்ளை தெறிகெட்டு ஓடிப்போய் மின் காந்தக் கம்பத்தில்மோதி காந்த மடிச்சு அப்படி சுருண்டு விழுந்து மாண்டிருக்க வேணும் பெரியவர் துயரக்குரலில் அனுதாப உரை வழங்கவும், ஏன் தாத்தா குயிற்பிள்ளையைக் காக்கைகள் விரட்டுகின்றன.? என வினவினர்.

''எப்பவுமே அப்படித்தான் குயிற்பிள்ளைகளைக் காக்கைகள் கண்ணில் கண்டாலே குட்டித் துரத்தும். காக்கையும் சேவலும் நமக்குப் பொழுதுவிடிய தினமும் சங்குமுழங்குவன என்றால் குயிற்பிள்ளையோ கோடை வெயிலை வசந்த நிலாவாக்கி தீங்குரல் கான அமுது வழங்கி நம்மை மகிழ்விக்கும். இவ்விதமாகவெல்லாம் மனிதர்கூட அவர்தம்

வாழ்வுக்குச் சுவை ஊட்டும் இப் பறவைகள் தமக்குள் ஏன் பொல்லாப் பகை பாராட்டுமோ.'' அது நாம் அறியக்கூடுவதில்லை.

தாத்தா அதன்மேலும்
சொல்வார்:-

சித்திரை வைகாசி மாத நிறைநிலா, சோலைமரங்களில் கூடித் துயிலும் காக்கைக்கும் குயிலுக்கும் வசந்த ருதுவின் இன்னுணர்வை வஞ்சிப்பதில்லை, ஏக சமத்துவமாகவே வாரிவழங்கும். அப்போதெல்லாம் அவை ஒன்றையொன்று கண்காணாமலே ஒரேமரத்தின் கிளைகளில் அங்கங்கு துஞ்சும் நிலையில் ஓரோர் சமயம் கதிர்மதியம் கண்குத்த அது ஆற்றாமல் கூடிக்குரலெழுப்பி ஓயும். இராமுழுதாக இன்னித மாரியாக 'வர்ஷம்' பொழியும் இப்பறவைகளின் கானம் மாந்தர் குலத்தினை இன்பக்கிளுகிளுப்பில் ஆழ்த்தும் சஞ்சீவி மாருதத்துக்கு ஒப்பானதென்றே சொல்ல வேண்டும்.

எங்களூர்த் தெருவிலே இன்றைக்கெல்லாம் பஸ் ஓடுகிறது. பிள்ளைகள் தெருவிலே சோலை பரப்பிய நிழல் மரங்களின் கிளைகளை அதற்காகவும்தான் வெட்டிச் சாய்த்தார்கள். இதனாலெல்லாம் தெருவிலே கோடை - இவ்வாண்டு நீண்டகோடை.''

அனாவசியமான தியாகங்களைத் தவிர்க்க நாம் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும்.

— மாஓ (1944) —

கறுப்பு முகங்கள்

தொலைவில்
மெல்லியதாய்க்கீறியதைப்
பருக,
நோக்கிவிரைய
கீறல்
விலகிநகரும்

இருட்டுள்
ஆழ்ந்ததவிப்பில்
கீறலில்
நனைந்து சுவைக்க,

களைபடிந்த
பிம்பத்து விழிகள்
திறந்தபடி
பார்த்திருக்கும்

அருகினில்
ஒட்டைப் போர்வையுள்
ஒளிந்த முகங்கள்
சுருங்கிக்
கருமை படர,

தொலைவின், திருப்பத்தில்
கீறல் அருக
நெருங்கி வருதலை
உணர,
ஒட்டையுள்ளே
கறுப்பு முகங்கள்
தலையை நீட்டி
எட்டிப் பார்க்கும் ...

— பாலசூரியன்

www.tamilarangam.net

கவிதைகள்

நெடும்பயணம்

இளவாலை, விஜயேந்திரன்

தொடுவானம்
தொடவென்றே
தொடர்கின்ற அந்தச்
சிறுபாதை மீது
சிலதடங்கள் பதிந்திருக்கும்.

யுகராகம் பாடுகிற
ஒருகோடி மானுடத்தின்
துளித் தெய்வ மொன்று
நடந்த தடங்கள் தாம் .....

நிழல்வீழும் சில போதும்
நிறைகின்ற இருள் நாளும்
துல்லியமாய்த் தடங்கள் -
கண்களிலே வந்துவிழும்.

அகன்ற இருதடங்கள்
அலைந்த பாதையிலே
தொடர்ந்து சிறுதடங்கள்
சோடி எனப் பதியும் ......

தொடர்ந்தும் விழிதுழாவிக்
கண்ட தடங்களோ
ஒரு மொட்டின்
காம்பென்று நலிந்திருக்கும்.

மூவிரண்டு தடங்கள் முன்நகரும்
கால இழைவில் -
அகன்ற இருதடங்கள் -
அகன்ற துயரம் வரும் .....
இருசோடி மீந்திருக்கும்.

மிகமெதுவாய் மண்மீது
பதிந்த தடமொன்று —
தொடர்ந்தங்கே
அழுந்த ஊன்றிவரும்
அகன்ற தடங்கள் வரும்.

தொலைவின் தொடரலில்
ஒருசோடி தடங்கள்
ஒருபோதில் விலகும்.
விலகும் தடங்களினை
விழியின் நீர் நனைக்கும் . ...

தொடர்ந்தப் பாதையிலே
துணிந்து இருதடங்கள்
பதிந்து வரும்.

தொடுவானம்
தொலைவினிலே
விழிபூத்துக் காத்திருக்கும்.

?

''குறிப்பிட்ட ஒரு கணத்தில் இருப்பதும், அக்கணத்தில் சாத்தியமானதாக இருக்கும் போராட்ட வடிவங்களுக்கும் மார்க்சிசமானது தன்னை மட்டுப்படுத்திக்கொள்ளாது. ஏனெனில் அது தரப்பட்டுள்ள சமூக நிலைமாறும் பொழுது புதிய போராட்ட வடிவங்கள் அதாவது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் போராட்டத்தில் பங்கு கொள்ளுபவர்களுக்குத் தெரியாத போராட்ட வடிவங்கள் தோன்ற முடியும் என்று ஏற்கின்றது. (லெனினின் நூல் திரட்டு, -2-பக்கம் 213)

நாளைய நாளும் -
நேற்றைய நேற்றும் -

முன்னே —
முகிழ்க்கின்ற பனிப் போர்வையிலும்
தோளின் சால்வை தூக்குதலை
இன்னும் நாங்கள் பேணவில்லை.

'அவர்கள்' தாமே மனிதரென்றுர்
'நாமும் நாமும்' என்றுர்த்தோம்.
சுவர்கள் —
சுற்றி எழுந்திருந்தன.
தகர்த் தெறிந்தோம்.

சுவர்கள் தகர்க்கப் படும் போதில்
கற்களெம் மீதில் விழுந்தனதாம்.
ஓய்வுக்குள்
தலைபுதைக்க மறுத்துவிட்டு
தொடர்ந் தார்த்தோம்; தகர்த்தோம்.

எமக் கென நிலவுபால் வீசும்
எத்தனை பொழுதுகள் செத்திருக்கும்......!
நினைக்க வியர்க்கும் — எனினும்
முனைப்பு முடிவிடத்தில்
சுவர்கள் வீழ்ந்தன.

வெற்றி எனச்சிறு
நினைப்பில் ஊறினேம்.
கால்கள் —
அத்திபாரக் கல்லில் தடுக்குது.
தோள்கள் மலையெனத்
தொடுத்து வைத்திருக்கிறோம்.
நாளைய நிகழ்விற்காய்!

www.tamilarangam.net

சஞ்சயன் பக்கங்கள்

சஞ்சயன் பக்கங்கள்

சஞ்சயன் பக்கங்கள்

அவள் அப்படித்தான் என்ற ஒரு படம் சில வாரங்களுக்கு முன் ஒரு 28'' அங்குல ரெலிவிசனில் வெகுசனங்களோடு வெகுசனமாக இருந்து பார்க்க முடிந்தது. சாதாரணமான ரசிகர்களைப் பொறுத்தவரை அந்தப்படம் கொஞ்சம் அதிக பட்சம் தான். இருந்தபோதிலும் கமலஹாசனையும், ரஜனிகாந்தையும் ஸ்ரீப்பிரியாவையும் நம்பிமட்டுமே ஏராளமானவர்கள் வந்திருந்தார்கள். பல இடங்களிலும் அந்தப் படம் எல்லோரையும் ஏதாவது ஒரு reaction தர வைத்தது.

இன்றைய எமது சமூக அமைப்பால் பெண்களின் நிலையை இனங்காட்டுவதும், விமர்சிப்பதும் என்ற தரத்தை கொஞ்சம் தொட்டிருப்பது படத்தின் சிறப்பம்சம். ஆண்களிடமிருந்து ஏமாற்றத்தையும், வெறுப்பையும் sex இற்கான எதிர்பார்ப்புகளையும் மட்டுமே பெற்றுக்கொண்ட மஞ்சு, பெண்களைப்பற்றி ஒரு விவரணத் திரைப்படம் தயாரிக்கிற Intellectual அருண் ஆகிய இருவரும்தான் படத்தின் மையம். பெண்களுக்கு இந்தச் சமூக அமைப்பில் கிடைக்கும் ஒரு இரண்டாம் பட்சமான நிலையை ஒருவகை அடிமைத்தனத்தை அறிவுபூர்வமாகத் தாங்கிக் கொள்ள இயலாத பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ள மஞ்சு எல்லா ஆண்களையுமே வெறுக்கும் ஒரு இயல்பு கொண்டவளாகக் காட்டப்படுவது அந்தப் பாத்திரத்தின் Maturity க்குப் பொருந்தாததுபோல் தோன்றுகிறது. படத்தின் முடிவிலும் கூட திருமணமாகி வரும் அருணின் மனைவியிடம் வுமன்ஸ் லிபரேஷன் பற்றி என்ன நினைக்கிறீங்க என்று கேட்க, மிகவும் கிராமத்துத் தன்மைகொண்ட அந்தப்பெண் இவள் என்ன கேட்கிறாள் என்ற மாதிரி அருணை வினவ அருண் கேள்வியை விளங்கப்படுத்திய பின் அதுபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்கிறாள். நீ கொடுத்து வைச்சவள் என்ற தொனிப்பட மஞ்சு பதில் கூறுவது இதுவரை காலமும் பெண்கள் தொடர்பாக அவள் வைத்திருந்த கருத்துக்களிலிருந்து அவள் பின்வாங்குவதாகவும், யதார்த்தத்தில் பெண்களுடைய உரிமை, சமூகத்தில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சரியான நிலை போன்றவற்றில் அவள் நம்பிக்கை இழந்ததாகக் காட்டுவதாகவும் உள்ளது. இந்த இடத்தில் தி. ஜானகிராமனின் மரப்பசு நாவலையும் நினைவு கொள்வது பொருந்தும் அந்த நாவலில் வரும் அம்மிணி என்ற பாத்திரம் சில தன்மைகளில் மஞ்சுவோடு உறவாகிறது. நாவலிலும் முடிவில் வித்தியாசமான ஒரு பெண் என்கிற நிலையிலிருந்து முடிவில் அவள் இறங்கி விடுகிறாள். மிகவும் இந்தச் சமூக அமைப்பில் பெண்களுக்குரிய நிலையையே அனுசரித்துப் போவது போல.

எனவே பொதுவாக பிரக்ஞையுள்ள தமிழ்க் கலைப்பரப்பில் வித்தியாசமான, முற்போக்கான சிந்தனையுணர்வுள்ள பெண்கள் தவிர்க்க இயலாதவாறு மீண்டும் சமரசங் கொண்டு போவது போலவே சித்திரிக்கப் பட்டுள்ளார்கள். (ராஜம் கிருஷ்ணனின் 'வீடு' வித்தியாசமான ஒரு முயற்சி எனினும் அந்நாவல் எவ்வளவு தூரம் இலக்கியமாகியிருக்கிறது என்பது பிரச்சனை.)

எனவே இச்சமரசம், மொத்தமான ஒரு சமூகமாற்றம் ஏற்படும் வரையில் இடையில் உள்ள இவ்வாறான முற்போக்கான சிந்தனையுடைய பெண்களின் விதி என்றோ அல்லது தனித்தனியாக இப்பெண்களுக்கு இப்படித்தான் முடிவு என்று சொல்வதன்மூலம் பெரும்பாலான சிந்தனாபூர்வமாகவும் விடுதலையுணர்வற்ற பெண்கள் மத்தியில் இத்தகைய ஓரிரு பெண்களின் வெளிப்பாடு சமூகத்திற்கு ஒரு காட்சிப்பொருளாக மட்டுமே இருக்கும் என்று சொல்வதுபோல் தெரிகிறது. இது உண்மைதான் எனில் இத்தகைய சமரசங்களும் ஓரளவு நியாயப்படுதல் தவிர்க்க இயலாதது. கவிதைகள்போல அமைந்துள்ளன. எனினும் சில இடங்களில் Documentary யின் சாயல் தெரிவதுபோல உள்ளது. நெறியாளர் ருத்ரய்யா படத்தின் பல Frame களில் தன்னை உறுதியாக வெளிப்படுத்துகிறார் இன்னும், வசனங்களைப்பற்றிச் சொல்லித்தான் தீரவேண்டும். இந்தப்படத்தின் வெற்றி என்று சொல்ல நினைத்தால் முதலில் முழுவதும் வசனங்களுக்குத்தான் பல இடங்களில் கவிதையாகிறது. சில இடங்களில் ஊசியாகிறது. வண்ண நிலவனுடைய செனம் என்று சொன்னார்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

★ ———— 2

மார்ச் மாத மல்லிகை இதழின் தூண்டில் பகுதியில் ஒரு கேள்வி இருந்தது. கரவெட்டி சி. மகேந்திரன் என்பவர் கேட்டதாக அவசியம் எல்லோரும் அந்தக் கேள்வியையும் அதற்கான ஜீவாவின் பதிலையும் படியுங்கள் தூய அழகியல் பற்றி வாய்ச்சவடால் அடிப்பவரென்றும் 'வால்ரியூப்' புகழ் அறிஞர் என்றும் ஒருவரைக் குறிப்பிட்டு அவருடைய புத்தகத்தினைப் பற்றிக் கேள்வி கேட்டிருந்தார்.

கேள்வி மறைமுகமாக அ. யேசுராசாவைப் பற்றியே இருந்தது. ஜீவாவும் பதிலின் ஆரம்பத்தில் கேள்வியில் யாரைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரைக் குறிப்பிட்டிருந்தது என்று புரியாதவராய் யோசித்து (?) பின்னர் உணர்ந்து கொண்டவராய் (ஓ!) பதிலளித்திருந்தார். கேள்வியில் சம்பந்தப்பட்ட புத்தகம் அ. யேசுராசாவின் 'தொலைவும் இருப்பும்' ஏனைய கதைகளும் அட்டை அமைப்பு- சௌ; முன்னுரை -சண்முகம் சிவலிங்கம்.

மனதில் எரிச்சலை ஏற்படுத்தும் கோழி குப்பையைக் கிளறியதுபோல அழகு என்று ஜீவா 'சௌ' அந்தப் புத்தகத்தின் அட்டையில் வரைந்திருக்கும் நவீன ஓவியத்தைப் பற்றிச் சொல்லும்போது நவீன ஓவியங்களுடனான ஜீவாவின் பரிச்சயமின்மைதான் வெளிப்படுகிறது. அந்தத் தொகுதியிலிருக்கும் சிறு கதைகளுக்கு சண்முகம் சிவலிங்கம் முன்னுரையில் எழுதியிருக்கும் விமரிசனத்தைவிட இனிமேலும் அறிவுபூர்வமான விமரிசனங்கள் வரும் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது. ஓரே குப்பை, ஓரே கஞ்சல், விரக்தி, வெறுப்பு எரிச்சல், பொறாமை, நபுஞ்சகத்தனம் இத்தனையும் நிரவிய ஒரு படைப்பு என்று ஜீவா அதிலுள்ள கதைகளைச் சொல்லும்போது,

அன்புள்ள ஜீவா,

அந்தச் சிறுகதைத் தொகுதிக்கு சாகித்திய மண்டலப்பரிசு கொடுக்கும்போது நீங்களும் ஒரு 'கௌரவ' சாகித்திய மண்டல உறுப்பினரல்லவா? அப்படியானல் ஒரே குப்பை ஒரே கஞ்சல் ஆன ஒரு சிறுகதைத் தொகுதிக்கு எவ்வாறு நீங்கள் பரிசு கொடுக்கச் சம்மதித்தீர்கள். ஜனவரி '76 மல்லிகையில் ஏ. ஜே. கனகரத்தினு அக்கதைத் தொகுதியை மல்லிகையில் விமர்சித்திருந்தும், மல்லிகையில் விமர்சனத்திற்குத் தகுதியில்லை என்று நிராகரிக்கப் பட்டது. என்று நீங்கள் சொல்வது எந்தவகையில் சேர்த்தி? இது ஒரு பெரிய முரண்பாடில்லையா ஜீவா என்று கேட்க வேண்டும் போலிருக்கிறது.

யேசுராசாவின் கதைசொல்லும் தன்மையைப்பற்றி சண்முகம் சிவலிங்கத்துக்கு மட்டுமல்ல எந்த ஒரு நல்ல இலக்கிய காரனுக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது. 'தொலைவும் இருப்பும்' தொகுதியில் உள்ள கதைகள் ஏறக்குறைய அனைத்திலும் நறுக்குத் தெறித்தாற்போல வெட்டான அழகான ஒரு நடை உள்ளது. உள்ளடக்கத்தைப் பிரச்சனையாக எடுக்காமல் சுஜாதாவின் நடையைப் பற்றி மிகவும் சிலாகிக்கிறீர்களே. (அதே இதழ் துாண்டில்) தொலைவும் இருப்பும் கதைகளைப் பற்றி At least உங்களுக்கு அப்படியேனும் பார்க்க முடியாது போய்விட்டதா? அஸ்வகோஷ் வண்ணநிலவன், பூமணி என்றெல்லாம் நீங்கள் நல்ல இலக்கியத்தைப்பற்றிச் குறிப்பிடும்

போது எழுவதெல்லாம் இப்போது எங்களுக்கு வெறும்போலியாகத் தெரிய ஆரம்பிக்கிறது.

இறுதியாக இப்படி ஒரு [illegible] உங்களுடைய வாசகர் [illegible]ருந்து வந்திருக்கும் என் [illegible] எனக்கு ஒரு நம்பிக்கையி[illegible] இருக்கிறது. கேள்வியிலும் [illegible]லும் ஒரு செயற்கைத்தனம் [illegible]ரிவதுதான் இந்த நம்பிக்கையின்மைக்குக் காரணம் வேறொன்றுமல்ல.

● ______ 3

இலக்கியம் என்றல் நாங்கள் படைப்பதுதான் என்று சொல்லிக்கொண்டு வெளிவருகிற சஞ்சிகைகள் நடுவே அடக்கமாக மணிமணியான கவிதைகளையும் தரமான சிறுகதைகளையும் நல்ல விமர்சனங்களையும் வெளியிட்டு வருகிறது. 'சிரித்திரன்' மாத இதழ் நகைச்சுவையின் இலக்கியத் தரத்திற்குப் பிரதியட்சமான உதாரணம் எம்மிடையேயும் உள்ளது என்பது ஆறுதல் தரும் ஒரு விஷயமாகும். சமகால நிகழ்வுகள் உடனடியாக கேலியுடன் கிண்டலுடன் 'சிரித்திரனில்' வெளிப்படும் அழகு ரசிக்கத்தக்கது. இவ்வளவிற்கும் ஆணி வேரான ஒருவர் சி. சிவஞானசுந்தரம் என்கிற 'சுந்தர்' சந்தர்ப்பம் கிடைத்தால் ஒருமுறை நீங்கள் சந்தித்துப் பாருங்கள். மனிதர்களின் இன்னெருவகையான பரிமாணம் உங்களுக்குத் தெரியக்கூடும்.

கவனிக்குக:

சஞ்சயனின் இரண்டாவது பக்கத்தில் எம்மை மீறிச் சில சொற்கள் விடுபட்டுப்போய் விட்டன. இப்பக்கத்தின் இரண்டாவது Colum இன் நான்கார்வது வரியில் 'கவிதைகள் யோல் அமைந்துள்ளன' என்பதை **திரைப்படத்தில் பல இடங்களில் காட்சிகள் கவிதைகள் போல் அமைந்துள்ளன.** என்று திருத்திக் கொண்டு மீளவாசிக்கவும்.

நிகழ்ந்துவிட்ட தவறுக்கு **''புதுசுகள்''** வருந்துகிறர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பறந்து போகும் சிறகு

கவியரச

காற்றின் நரம்புகளில்
மின் விசிறிகள் சுழலும்...,
மெலிதாய்ப் பட படக்கும்
காகிதங்கள்,
உரத்ததென
Lecturer இன் குரலோசை
சிலவேளை நிலம் உராயும்
செருப்புக்கள்......
(தொடர்ந்தபடி......எப்போதெனினும்
இருமல் –)
மற்றபடி
அமைதி தழுவி வரும்
Lecture room.

முன்வரிசைக் கதிரைகளில்
முகங்கள் நிரம்பி –
எனைப் பின்னுக் கனுப்பி விடும்
போதுகளில் – எப்போதும்
இப்படித்தான்:-

மெதுவாய் இறகு கட்டி
மிதந்தபடி வெளியேறும்
என் மனது -
எனினும், சமயங்களில்
மீண்டும் திரும்பி வரும்
மணி பார்த்துப் போக என -

தூரத்தில் ரயிலோசை
துவங்கி விட - இங்கிருந்து
Leval Crossing
மணி ஒலிக்காய்க் காத்திருக்கும்
பின்னர் –
கட கடத்து ரயில் கடக்கப்
பெட்டிகளை எண்ணுதற்காய்ப்
போய்த் திரும்பும் –

பெரும்பாலும் தோல்வியுறும்;
முன் கதிரைக் குழிவுள்
முதுகு சரிந்தபடி
உட்கார்ந் தெழுதும் ஒரு
பெண்ணின்,
பிடரிக்குள் -
கறுப்பாய்ச் சுருள் கொண்டு
நெளிந்திருக்கும் பூனைமயிர்க்
கற்றைகளை
நிமிண்டி விட விரல் நுனிக்குப்
பசி கொடுக்கும்;

இடையிடையே விழி நிமிர்த்தி
Black Board இல்
மேய்ந்தாலும்,
நாளைக்கு-
முன்வரிசைக் கதிரைகளில்
போய் அமரும்
எண்ண உதித்தெழவும்
மீண்டும் வெளிப்பறக்கும்;

Degree முடிந்த பின்பு
உடலோ – தனித்தபடி
Interview போய்த் திரும்பிப்
போய்த்திரும்பிப் போய்த்
திரும்ப –
எப்போதும் போல
ஈர்ப்பு விசை எதுவுமற்று
வெளியில் திரியும்
இது -
தூவி இறகாக என்
மனது....!

05-01-1979

www.tamilarangam.net

"பெண்கள் வெறுமே இன்பம் தரும் சடப்பொருட்கள்" என்ற கருத்தே நீட்சே எனும் மெய்யியலாளனின் பெண்கள் பற்றிய கருத்தின் அடிப்படை போல் தெரிகிறது. இக்கருத்தைக் கேட்கும்போது பல பெண்களுக்கு - ஏன், சில ஆண்களுக்குக் கூட - ஆத்திரம் வரலாம். ஆனால் பெரும்பாலான ஆண்கள் இதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வர். காரணம், அவர்களது சுயநலம்; பெண் வெறுமே சடப்பொருளாக இல்லாது ஒரு அறிவு ஜீவியாக - சிந்திப்பவளாக - தன் தகுதி அறிந்தவளாக மாறிவிட்டால் தங்களிலும் மேம்பட்டு விடுவாள், தாம் தவறிழைக்கும் போது தட்டிக் கேட்பாள் என்று அவர்களுக்குள்ள பயம். இதனாலேயே காலம் காலமாக பெண்களை அடிமைகளாக்கி, அவர்களை முன்னேற விடாவண்ணம் சமூக அமைப்புகளையும், அவற்றின் விதிமுறைகளையும் உருவாக்கி வந்திருக்கிறார்கள். இதற்கு அவர்களது உடல் பலமும், பொருளாதார பலமும் உதவி புரிந்து வந்திருக்கின்றன.

இத்தகைய சமூக அமைப்பு முறை அண்மையில் தோன்றியதல்ல. கீழைத்தேயத்தில் மட்டும் காணப்பட்ட தொன்றுமல்ல. பழைய காலத்திலிருந்து ஆண் வெளிவேலைகளைச் செய்ய, பெண் வீட்டு வேலைகளைச் செய்வதென்பது ஒருவித தொழிற் பிரிப்பாக, அதாவது ஒவ்வொருவரும் செய்ய வேண்டி இருந்த வேலைகளை எளிதாக்கு முகமாக கொண்டு வரப்பட்ட ஒரு வழக்கமாகவே இருந்தது. பின்பு இத் தொழில்களில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற அவர்கள் தொடர்ந்தும் அத் தொழில்களையே செய்து வந்தனர். ஆனால் காலப்போக்கில் இந்நிலைமை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியதால் தொழில்பிரிப்புச் செய்யப்பட்டிருந்த முறையும் மாறவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆதிகாலங்களில், அதாவது நாகரிகம் அல்லாத அல்லது அவ்வளவு வளராத காலகட்டங்களில் இத் தொழிற்பிரிப்பு முறையில் அதிகம் பிரச்னைகள் எழவில்லை. ஆனால் நாகரிகம் வளர வளர, அறிவு விருத்தியடையத் தொடங்க, இவ் வளர்ச்சியில் - இவ்விருத்தியில் பங்கேற்பது யார் என்ற பிரச்னை எழுந்தது. அப்போது வெளியில் சென்று உழைத்து அதனால் கூடிய தன்

பெண்கள் வெறுமே இன்பம் தரும் சடப்பொருட்கள் மட்டுமா?

செல்வி மைத்ரேயி சபாரட்ணம்
பேராதனைப் பல்கலைக் கழகம்.

னம்பிக்கையும், பரந்த அறிவும், பலமும் பெற்றிருந்த ஆண்வர்க்கம் தன்னியக்கமாகவே (automatic) இதில் பங்கேற்று முன்னணியில் திகழ்ந்தது. ஆனால் அதே வேளை, தொழிற்பிரிப்பின் காரணமாக வீட்டுத் துறையைப் பொறுப்பேற்று, அவ்வளவு காலமும் உள் அடங்கிக் கிடந்ததால் சுயநம்பிக்கையும், பொது அறிவும், அனுபவ ஞானமும் குறைந்திருந்த பெண் வர்க்கம் வெளியுலகம் விரிந்து பரந்து செல்வதை உணராது கிணற்றுத் தவளைகளாக வாழத் தலைப்பட்டது. இதற்கு விதி விலக்காக ஒரு ஔவையோ அல்லது ஒரு மேரிக் கியூரியோ இருந்தாலும் பெரும்பான்மையான பெண்கள் இனப்பெருக்கத்தைத் தவிர வேறெந்த ஆக்கபூர்வமான செயலிலும் ஈடுபடவில்லை. அவர்களை இந்நிலையிலிருந்து மீட்பதற்கு அப்போது முன்னேறியிருந்த ஆண் வர்க்கம் தனது சுயலாபம் கருதி எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

ஆனால் காலம் செல்லச் செல்ல ஆண்கள் தொழிற் பிரிப்பில் தமக்களிக்கப்பட்ட வேலையை, அதாவது 'உழைத்து வீட்டைக் காத்தல்' என்ற பணியைச் செய்யாது வழுவத் தொடங்கிய போது - கூட்டுக் குடும்ப முறை (joint family system) கூட இல்லாதொழிந்த போது - பெண் வீட்டை விட்டு வெளி வந்து உழைத்துக் குடும்பத்தைக் காக்க வேண்டிய நிலைக்காளானாள். இவ்வாறு அவளது வெளியுலகத் தொடர்பு வளர்ச்சியடைந்த போது - அதில் ஏற்பட்டிருந்த மாற்றம், முன்னேற்றம் போன்றவற்றை அவள் அறியத் தொடங்கிய போது - சமூக நாகரிக வளர்ச்சி மேலும் ஏற்படுவதற்கு தானும் ஏதாவது பங்களிப்பைச் செய்யவேண்டும் என்ற ஆசை, உந்துதல் அவளுக்கு ஏற்பட்டது.

சமூக மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியதால் கல்வியறிவு, வெளியுலகு பற்றிய அறிவு கிடைக்கப்பெற்று அறிவு பூர்வமாக சிந்திக்கத் தொடங்கிய பெண்கள், சமுதாய வளர்ச்சிப் படிமுறையில் தாம் எவ்வளவோ பின்னிற்பதைக் கண்டனர். இவ் இடைவெளியை நிரப்ப அவர்கள் முயன்றபோது, இதுவரை காலமும் அதாவது சமூக மாறுதல்களுக்கு முன்பிருந்த சமூக விதிமுறைகள் அவர்களைத் தடுத்த போது அவர்கள் செய்வதறியாது திகைத்தனர். சிலர் இதை எதிர்த்துப் போராடவும் துணிந்தனர்.

ஆனால் இப்புரட்சி மனப்போக்கு எல்லாப் பெண்களிடமும் ஏற்படவில்லை. காலம் காலமாக அடிமைப்பட்டு, முதுகெலும்பற்றவர்களாக வாழ்ந்து பழகி விட்டதனால், இது தான் நியதி - இதுதான் இயற்கை என்றெண்ணி, தாம் அடிமைப் பட்டிருக்கிறோம் சமுதாய வீதியில் நடத்தும் பிரயாணத்தில் எவ்வளவோ பின்நிற்கிறோம் என்ற பிரக்ஞையே இன்றி பெரும்பா

www.tamilarangam.net

லான பெண்கள் வாழ்கிறார்கள். பெண்களை அடக்குவதை நோக்கமாகக் கொண்ட ஆண்களோடு தனிப்பட்ட முறையில் தம்மை நன்கு இணைத்துள்ள பெண்கள் காதல், நிலையான வாழ்க்கை என்பவற்றுக்காக ஆண்களின் தேவைகள், விருப்புகளுக்கேற்ற வகையில் தம்மை மாற்றி வாழக் கூடுதலாக முயற்சி செய்கிறார்கள். அவ்வாறன்றி ஏதாவது துணிச்சலாக காரியமாற்றும் பெண்களை ஏனையோர் குறைகூறுகின்றனர். இத்தகைய பெண்களும் பெண்கள் முன்னேற்றத்தை விரும்பாத ஆண்களுமாகச் சேர்ந்து பழைய விதிகளிலிருந்து விடுதலை பெறத் துடிக்கும் பெண்களின் வேகத்தை அடக்கி அவர்களைப் போராட விடாது தடுக்கிறார்கள்.

இப் பண்பு பெரும்பாலும் முதலாளித்துவ நாடுகளிலும் வளர்ச்சியடையாத, வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளிலுமே காணப்படுகிறது. சோஷலிஸ நாடுகளில் சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு ஆண்களுக்கு எவ்விதத்திலும் குறைந்ததாக இல்லை. ''மாதர், பூரண விடுதலையை வென்று பெறாத வரையிலும் தொழிலாள வர்க்கம் பூரண விடுதலையை அடைய முடியாது'' என்று லெனினும், ''தன் மனைவியை அடிக்கும் ஒருவனை சாகும் வரை சவுக்கால் அடித்தால் கூட மார்க்ஸ் ரசித்திருப்பார்'' என்று கார்ல் மாக்ஸின் நினைவுக் குறிப்பில் வில்கெலம் லீப்னெக்ட்டும் கூறியதிலிருந்து இதை நாம் அறியலாம். இதிலிருந்து பெண் விடுதலை, சமத்துவம் என்பன 'பொருளாதார அமைப்பு ரீதியான மாற்றத்தோடு' தொடர்புடையதா என்ற கேள்வியும் எழுகின்றது.

நீட்சே போன்றோரின் கருத்தைப் பெண்கள் ஏற்றுக்கொள்ளுவது பெண் வர்க்கத்தையே அவமானப்படுத்துவதற்குச் சமனாகும். எந்த ஒரு உண்மையான-தன்மானமும், சுய கௌரவமும் உள்ள – பெண்ணும் இதை ஒப்புக்கொள்ள மாட்டாள். அதுவும் உயிரும், உணர்ச்சியும், அறிவுமுள்ள ஒரு ஜீவியைப் பார்த்து, வெறுமே இருப்பதற்கு இடமும் நிறையும் மட்டுமே கொண்டுள்ள ஜீவனில்லாத ஒரு சடப்பொருள் என்று கூறினால் எந்தமானமுள்ள ஒரு ஜீவியும் பொறுத்துக்கொள்ள மாட்டாள்.

ஆனால் ....! அவளைப் பார்த்து,

''சரி, நீ வெறும் இன்பம் தரும் சடப்பொருள் அல்ல என்றால், நீ ஆக்க பூர்வமாக எதையாவது சாதித்திருக்கிறாயா? அல்லது ஒரு அறிவு ஜீவியாக வாழ்ந்திருக்கிறாயா? துணிச்சலுடன் முன் சென்று எதையாவது தலைமைதாங்கி நடத்தும் தைரியம், ஆற்றலைப் பெற்றுள்ளாயா?'' என்றுகேட்டால் பெரும்பாலான பெண்களின் பதில் மௌனம் தான்.

''ஏன் இந்திரா காந்தி இல்லையா?, திருமதி தாட்ச்சர் இல்லையா?'' என்று சிலர் கேட்கலாம் இன்னும் சிலர் கேட்கலாம்.

''எல்லா ஆண்களும் ஏதோ பெரிசா சாதிக்கிறார்களா? இல்லையே! யாரோ சிலர் சாதனை செய்ய, பெயரை மட்டும் பொதுவாக ஆண்கள் என்று தட்டிச் செல்கிறார்களே'' என்று.

உண்மைதான்! ஆனால், ஆண்கள் செய்திருக்கும் சாதனைகளுக்கு அல்லது புதிய கண்டுபிடிப்புகளுக்குச் சமனாக பெண்கள் செய்திருக்கிறார்களா, ஆகக் குறைந்தது கால்வாசியாவது...? இதற்கு ''இல்லை'' என்றுதான் வருத்தத்துடன் பதில் கூறவேண்டியுள்ளது. அறிவியல் விஞ்ஞானத்துறையாகட்டும், பொதுஜனத் தொடர்பு, கலைத்துறையாகட்டும், கடினமான உடலுழைப்பு முயற்சியாகட்டும் எத்தனை பெண்கள் இவற்றில்சாதனை புரிந்திருக்கின்றனர்? ஆண்களோடு ஒப்பிடும்போது விரல் விட்டு எண்ணிவிடலாம்.

உதாரணத்துக்கு எடுப்பின், ஒரு விவாதம் அல்லது கலந்துரையாடல் நடைபெறும்போது அதைப் பார்க்க வந்திருக்கும் பெண்கள் எவ்வளவு? அதில் எழுந்து சபையோர் கருத்தோ அல்லது ஏதேனும் சந்தேகங்கள், கேள்விகள், விமர்சனங்களோ செய்யும் பெண்கள் எவ்வளவு? ஆண்களோடு ஒப்பிடுகையில் ஒரு மிகச் சிறு வீதம். நான் அவதானித்தவரையில் மாணவ மட்டங்களில் (பெண்கள் பாடசாலை தவிர்ந்த பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில்) பெண்கள் இப்படியான பொது நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவது குறைவாகவே காணப்படுகிறது.

உதாரணத்துக்கு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு நடத்திய பேச்சுப்போட்டியைக் கூறலாம். ஒரு பெண்கூட எழுந்து பேச முன்வராததால் பெண்களுக்கான பரிசு வீணே விடப்பட்டது. இதற்கு அங்குள்ள மாணவிகள் பேசுந்திறன் அற்றவர்கள் என்பதல்ல கருத்து. துணிச்சல் இல்லை என்பதே பொருத்தமான காரணமாகும்.

இவ்வாறு பெண்கள் ஒன்றுக்கும் துணிச்சலில்லாது பதுங்கிக் கிடப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். நமது சமூக அமைப்பில் பெண்களுக்கு வழங்கப்பட்ட இடம் அல்லது விதிக்

மனைவி ஒரு வீணையல்ல
நினைத்தபொழுது மீட்டிவிட்டு
வேண்டாதபொழுது தள்ளி வைப்பதற்கு.

— ரஷ்யப் பழமொழி —

www.tamilarangam.net

கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அல்லது பெண்பற்றி சமூகம் கொண்டிருக்கும் கருத்துகள் என்பன பெண்ணின் ஆளுமை விருத்தியைத் தடுக்கும் கற்களாகின்றன. ஒரு பெண் தன் வாழ்வு முழுமையும் தந்தை, கணவன், மகன் என்போருக்கு அடங்கி வாழவேண்டும் என வற்புறுத்தப்படுகிறாள். சமூக விதிகள், வழிமுறைகள் என்பன எல்லாவற்றிலும் பெண்களுக்கொன்றாகவும், ஆண்களுக்கு வேறொன்றாகவும் இரட்டைத் தன்மையதாகக் காணப்படுகின்றன. உதாரணமாக பலாத்காரம், கற்பழிப்பு நடந்தால் குற்றம் சாட்டப்படுவது அல்லது அவமரியாதை அடைவது பெண்களே. சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவது கூட விபசாரத்தில் ஈடுபட்ட பெண்ணையே ஒழிய, ஆணை அல்ல.

பெண்ணாக வாழ்தல் என்பது வாழ்க்கை முழுதும் பயத்தோடு- ஒருவகைச் சிக்கலோடு (Complex) வாழ்தலாகும். அவள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும், செய்யும் ஒவ்வொரு செயலும் பயத்தோடு பல தடவை யோசித்தே செய்யப்படவேண்டியிருக்கிறது. இப்படி நடந்தால் பழிச்சொல்லுக்கு அவதூறுக்கு ஆளாக நேருமோ என யோசித்து தயங்கியே செய்ய வேண்டியிருக்கிறது. அவள் எவ்வளவு பெரிய பதவி வகித்தாலென்ன! இருண்டபின் வீட்டுக்கு வெளியே இருக்க அல்லது தனியாகப் பயணம் செய்ய அல்லது அறிவுரீதியாகவேனும் அந்நியன் ஒருவனுடன் கதைக்க அல்லது தேவை, தொழில், நட்பு நிமித்தம் வேற்று மனிதனுடன் பேசவோ, போகவோ கூட பயப்படவேண்டிய ஒரு நிலையில் பெண் வாழுகிறாள். அவள் தன் மனதில் எழும சிந்தனைகளை - போராட்டங்களைபுரிந்து பகிர்ந்துகொள்ள- அதை எண்ணி மகிழக்கூட அஞ்சுகிறாள். இதனால் வாழ்க்கையே பெருஞ்சுமையாய் மௌனமாய்ச் சோகமாய் மாறிவிடுகிறது.

எமது சமூகத்தில் 'பெண்ணின் வாழ்க்கையின் ஒரே கடமையும் குறிக்கோளும் விவாகமாதலே' என்ற கருத்து சிறுவயதிலிருந்தே ஊட்டப்படுகிறது. பெயர் கெட்டால் விவாகமாகாது போகுமோ, அதிகம் படித்தால் கூடியசீதனம் கொடுத்து அதிகம் படித்த மாப்பிள்ளை தேடவேண்டிவருமோ என்ற அற்ப பயங்களே அவள் துணிந்து காரியமாற்றுததற்குக் காரணமோ என ஐயுற வேண்டியுள்ளது. எவ்வளவு அதிகம் படித்த, கூடிய தகுதியுள்ள பெண்ணாயினும் வேறெந்த தகுதியுமில்லாது 'ஆண்' என்ற ஒரே ஒரு தகுதி மட்டுமுள்ளவனைத் திருமணம் செய்வதற்கு சீதனம் கொடுக்க வேண்டியுள்ளது.

ஒரு விதவை அல்லது கைவிடப்பட்ட பெண் அல்லது விவாகரத்து செய்த பெண்ணுக்கும் இதே நிலைகளிலுள்ள

ஆணுக்கும் கிடைக்கும் சமூக அந்தஸ்த்தில் தான் எவ்வளவு வேறுபாடு! ஆணைவிட உயர்சம்பளம் பெறும் பெண்ணாயிருந்தாலும், வேலைத்தலத்தால் வீடு திரும்பியதும் தொடர்ந்து வீட்டுவேலைகளைச் செய்ய அவள்தானே நிர்ப்பந்திக்கப்படுகிறாள். ஏன் சிறுபராயத்தில்கூட ஆண்பிள்ளைகள் சும்மா இருந்து விளையாட பெண்பிள்ளைகளோ தாய்க்குதவியாக வீட்டு வேலைகளிலீடுபடுமாறு வளர்க்கப் படுகிறார்கள். ஆண்பிள்ளைகளின் கல்வி, ஆளுமை விருத்தி இவைகட்கு எடுக்கப்படுமளவு சிரத்தை பெண்பிள்ளைகள் விஷயத்தில் காட்டப்படுவதில்லை.

சமவேலை செய்தாலும் சில துறைகளில் பெண்களின் ஊதியம் ஆண்களிலும் குறைவாயே காணப்படுகிறது. உதாரணம் பெருந்தோட்டத்துறை. ஏழ்மை, போஷாக்கின்மை, பழைமை பேணல், மூடக்கொள்கைகளை நம்புதல் போன்ற குறைகள் பெண்கள்மீதே சுமத்தப்படுகின்றன.

இவ்வாறு நீண்ட காலமாக பெண் அடக்குமுறைக்கு ஆளாகி நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வருவதை தடுக்க என்ன செய்யலாம் என்ற கேள்வி எழுகிறது. அதற்கு முதலாவதாக எல்லாப் பெண்கள் மத்தியிலும் அவர்களது நிலை பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். பழைய மாயைக் கொள்கையில் மூழ்கிக் கிடக்கும் பெண்களைத் தட்டி எழுப்பி சமூகத்தில் அவர்களது அந்தஸ்து என்ன என்பதை விளக்கி, காலத்துக் கொவ்வாத செல்லரித்துப் போய்க்கொண்டிருக்கும் இந்த சமுதாயக் கருத்துகளை - அடிமை விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் அவர்கள் நிற்கிறார்கள் என்பதை உணர்த்தி அவர்களைப் போராடத் தூண்டவேண்டும்.

தனித்தனியாகப் போராடுவதில் ஒருவிதமான பிரயோசனமுமில்லை. அப்போது கிடைக்கும் கசப்பான அனுபவங்கள் போராட்டம் என்ற சொல்லையே வெறுக்கச் செய்து விடும். எல்லாரும் சேர்ந்து ஒற்றுமையாகப் போராடும் போது அது இலகுவாக இருக்கும். இதில் பெண்கள் அவ்வளவு சிரத்தைகாட்டாது பின் நிற்பதற்குக் காரணம், இதை அவர்கள் தனிப்பட்ட பிரச்சனை எனக் குறைத்துக் கவனித்ததே ஆகும். இது உண்மையில் சமூக பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொதுப் பிரச்சனையாகும். ஒரு நாட்டு வளர்ச்சிக்குப் பெண் அளிக்கும் பங்கு கணிசமானது.

அரசாங்கம் சட்டங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சமத்துவம் கூட வெறும் ஏட்டளவிலேயே உள்ளது. கிடைத்த சில உரிமைகளும்கூட மத்தியதர, உயர்மத்தியதர வர்க்கத்துக்கே பயன்படுகின்றன. இவ்விதம் கிடைத்த சில உரிமைகள் பெண்கள் பற்றிய தாக்கத்தைப் பின் போடுகின்றன.

இதை இவ்வாறு பின்போடாது, விழித்தெழுந்த பெண்களாவது தூங்கும் பெண்களைத் தட்டியெழுப்பும் மகத்தான பணியிலிறங்கவேண்டும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரத்த புஷ்பங்கள்-
ஒரு விமர்சனம்

எம். ஏ. நுஃமான்

புதுவை இரத்தினதுரையின் மூன்றாவது கவிதை நூலாக 'இரத்த புஷ்பங்கள்' வெளிவந்துள்ளது. ஒரு தோழனின் காதல் கடிதம், வானம் சிவக்கிறது ஆகியவை முன்னர் வெளிவந்த அவரது கவிதை நூல்கள். விருப்பான சொற்களில் கோஷம் எழுப்புவதே இவரது கவித்துவப் பாணி. இத்தகைய 'கோஷ நடையை' ஒட்டிய கவிதைகளே இரத்த புஷ்பங்களிலும் காணப்படுகின்றன. இவற்றுட் பல இடதுசாரி அரசியல் சார்பான கோஷங்களாகும். இவரது அதி தீவிர இடதுசாரிக் கோஷங்கள் இவருக்கு முற்போக்குக் கவிஞர் என்ற புகழைப் பெற்றுக் கொடுத்தன. இப்பொழுதுஇவர் புரட்சிக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இரத்த புஷ்பங்கள் தொகுதியில் 26 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஆறுகவிதைகள் இவரது கவிதைக் கொள்கை பற்றிய பிரகடனங்கள். "சுந்தரிகள் காலிடுக்கு, நிக்கர் சுழற்றுகிற நிமிடசுகம், அடுத்த வீட்டுச் சந்திரா, அவளின் மார்புச்சதை வெளித் தெரியும்போது சிந்திடும் அழகு, சுதியான கன்னியரின் பவளச் செவ்வாய் சுந்தரப் பூங்கன்னங்கள், கதலிக்கால்கள், கச்சுமுலை, முலையழகு, மினி பெல்பொட்டம், குன்று, குளிர்நிலவு, குமரிமுலை" போன்றவற்றைப் பாடுவது அல்ல இவரது கவிதைப்பணி.

என் கவிதை ஏழையை எழுப்பிவிட மட்டும்.
எழுப்பியபின் புரட்சியதுக் கேவிவிடமட்டும்.
மென்னுடலம் வாடி உரைக்கின்ற வரிக்குமட்டும்
மேதினியிற் பொதுவுடமை மிளிர்வதற்குமட்டும்.

என்பது இவரது கவிதைக்கொள்கை. "மினிபாடி பெல்பொட்டம் பார்டிப்பாடி மினுக்கெட்டு வருவோர்கள் பெண்கள் கொஞ்சம் குனிகின்றபோதவரின் குரும்பை பாடிக் குதிப்போடு திரிபவர்கள்" யாரும் இன்று ஈழத்துக் கவிதை உலகில் இல்லாதபோதிலும் கவிஞர் அத்தகைய கவிஞர்களை கற்பனையில் தனது எதிரிகளாக முன்னிறுத்தியே தனது கவிதைப் பிரகடனத்தை செய்கின்றார், ஆனால் இதே தொகுப்பிலே தான்,

'விளக்கணைய இருள் பரவ வேண்டும் - நான்
விரித்த கவி நின்றுவிட வேண்டும்
கலகலத்து அவள் சிரிக்க வேண்டும் - என்
கையணைப்பில் துடி துடிக்க வேண்டும்
போதுமென அவள் துடிக்கவேண்டும் - நான்
பூம்களைப் போட்டுலுப்ப வேண்டும்
கோதையவள் மெய்மறக்க வேண்டும் - நான்
கோலமவள் மேனியிட வேண்டும்
கையிணைந்து கால்பிணைய வேண்டும் - என்
காதுடனே அவள் கதைக்க வேண்டும்
மெய் முழுதும் நீர்துளிக்க வேண்டும் - அவள்
மேனியிலே பாட்டெழுத வேண்டும்'

என்ற கவிஞரது பாடலும் இடம்பெற்றுள்ளது. 'என் கவிதை பண்டிதர்க்கும் - பாவலர்க்கும் அல்ல - பெண் நினைவால் வாடுகின்ற காளையர்க்குமல்ல' என்ற கவிஞரின் கொள்கைப் பிரகடனத்துக்கும் மேற்காட்டிய கவிதைக்கும் எவ்வித உறவுமில்லை. கவிதை பற்றிய தனது பிரகடனங்களுக்கு ஒத்ததாகத்தான் தனது கவிதை அமைய வேண்டும் என்ற கொள்கை கவிஞருக்கு இல்லைப் போலும். பெண்களைப் பற்றி பாடக்கூடாது என்று சொல்வதிலேயே கவிஞருக்கு ஒரு சுவை இருப்பதை நம்மால் உணர முடிகிறது. கன்னி மார்புக்காய், மார்புச்சதை, குமரிமுலை, கச்சுமுலை போன்ற தொடர்கள் இவரது கவிதைகளில் பயின்று வருவதனை உதாரணமாகக் காட்டலாம்.

இவரது கொள்கைப் பிரகடனங்களுக்கு ஏற்ற சில 'புரட்சி'க் கவிதைகளும் இத் தொகுப்பில் உள்ளன.

பெற்றதாய் எதிராய் வந்து
புரட்சியின் போது ஏதும்
குற்றங்கள் செய்தாலெங்கள்
குண்டுகள் அவளின் நெஞ்சைப்
புற்றுகள் ஆக்கும் ஆமாம்
புரட்சியின் போது நாங்கள்
சுற்றமும் துணையும் பாரோம்
சூடுகாண் புலிகள் ஆவோம்'

போன்ற அதி தீவிர புரட்சிக் கோஷங்களும் "அம்மியில் மிளகாய் வைத்து அரைப்பதைப்போன்று பூஷ்வா வம்பரை அரைக்கவேண்டும், வா உடன் படையிற் சேரு, போன்ற புரட்சி அழைப்புக்களும் - சிங்கள, தமிழ், முஸ்லிம் பாட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டாளி வர்க்கம் ஒன்று சேர்ந்து புரட்சியை நடத்தியே தீரும் என்று வலியுறுத்தும் கருத்துக்களும் இவற்றுள் அடங்கும்.

மாத்தறையில் பொடி மெனிக்கா துவக்கெடுப்பாள்
மாதகலில் கந்தையர் பொல்லெடுப்பான்
நாத்தாண்டியாவினிலே காசீம் லெவ்வை
நாருரிக்கும் கத்தியினைக் கரமெடுப்பான்
வாடாதகார்ள் மாக்ஸின் தத்துவங்கள்
வழிகாட்டும், அந்தவழி நடந்து சென்று
ஓடான பாட்டாளி வர்க்க மிங்கும்
உயர்ச்சி பெறும்கட்டாயம் இருந்து பாரும்'' என்று

ஒருபாடலில் கவிஞர் கூறுகின்றார். ஆனால் வாடாத கார்ள் மாக்ஸின் தத்துவங்கள் இவருக்கு வழிகாட்டவில்லை' என்று தெரிகின்றது. மார்க்சியத் தத்துவத் தெளிவில்லாமல் வெறும் தீவிர இடதுசாரி அரசியல் கோஷங்களையும் மேலோட்டமான தேசிய ஐக்கியம் பற்றிய கருத்துக்களையுமே இவரது தொகுப்பில் காணமுடிகின்றது. மார்க்சியத் தத்துவத்தில் நல்ல தெளிவிருந்திருந்தால் 77 ஆகஸ்ட் கலவரம் இவரைச்சிதற அடித்திருக்காது. கலவரத்தின் பாதிப்பினால் தீவிர இடதுசாரிக் கோஷம் எழுப்பிய இக்கவிஞர் தீவிர இனவாதக் கோஷமெழுப்பும் கவிஞராக மாறியுள்ளார். ''எழுந்து வா நெருப்புத்தாயே'' ''வாசலில் நெருப்பு மூளும்'' ஆகிய இவரது தொகுப்பிலே உள்ள கடைசி இரு கவிதைகளும் இதையே புலப்படுத்துகின்றன. சிங்கள இனவாதத்திற்குப் பதில் அதற்கு சமதையான தமிழ் இனவாதமல்ல என்பது இந்தப் புரட்சிக் கவிஞருக்குத் தெரியவில்லை. இவர் ஒரு மார்க்சிய வாதியாக இருந்திருந்தால் ''வாசலில் நெருப்பு மூளும்'' போன்ற ஒரு மிருகத்தனமான கவிதையை இவரால் எழுதியிருக்க முடியாது. முழுச் சிங்கள இனத்துக்கும் எதிராக இதில் இவர் சாபமிடுகின்றார். சிங்களக் கிணறுகள் யாவும் சீக்கிரம் ஊற்றடைக்க வேண்டும், மணநாளிலும் மரணமே நிகழவேண்டும்., ஆக்கும் சோற்றில் புழுக்கள் நெளிய வேண்டும், சிங்களப் பெண்கள் எல்லாம் மலடாகவேண்டும், முற்றிய வயல்கள் எல்லாம் பற்றி எரியவேண்டும், வற்றாத கங்கையும் வற்றிப் புழுதியாக்கவேண்டும், பஞ்சம் வந்து அவர்கள் சாக வேண்டும் என்று இவர் சாபமிடுகின்றார்.

சிங்கள இனத்தைச் சேர்ந்த இனவெறியர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினால் அவர்களைக் கொடுமைக்குள்ளாக்கியது எவ்வளவு மிருகத்தனமானதோ-அவ்வளவு மிருகத்தனமானது சிங்களவர் என்ற காரணத்தினால் அவர்கள் எல்லோருக்கும் சாபம் இடுவதும்

பெண் – ஒரு கண்ணோட்டம்

நான் கிட்டத்தட்ட ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றி வந்திருக்கிறேன். நம் நாட்டில் உள்ளது போன்ற இரங்கத்தக்க நிலை, பெண்களுக்கு வேறெங்குமில்லை. பொருளாதாரம் மற்றும் தொழில் துறைகளில் பின் தங்கியுள்ள ஆபிரிக்காவில் கூட. பெண்களுக்கு நம்நாட்டுப் பெண்களை விட தன்னம்பிக்கை அதிகம் உள்ளது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நம் பெண்கள் மனத்தளவிலேயே அடிமைப்பட்டுப் போய் விட்டனர். ஆதலால் இயல்பாகவே அவர்களுக்கு ஒரு தயக்கமும் சங்கோஜமும் ஏற்பட்டு விட்டது. இது அடிமைத்தனத்தை விட மோசமானது புற பந்தங்களை... விலங்குகளைத் தகர்த்தெறிவதே கடினம். இந்நிலையில் மனத்தளவில் ஏற்பட்டுள்ள தளைகளையும், அவற்றின் வலுவான பிணைப்பையும் பற்றி அனுமானிப்பது கூட கடினமல்லவா?

ஸ்ரீமதி அம்ருதாப்ரீதம்
பஞ்சாபி

நன்றி: மங்கை - டிசம்பர், 1979

ஒரு சாராரின் இனவெறியினால் அறிவு பிறழ்ந்த இனவெறியின் வெளிப்பாடே இதுவும். வற்றாத கங்கை வற்றிப் புழுதியானால் அதனால் பயன் பெறும் தமிழ்ப் பிரதேசத்திற்கும் தண்ணீர் கிடைக்காது போகும் என்பதையும் கவிஞர் தனது வெறியில் மறந்துபோனார் போலும். கண்ணகி தனது முலை திருகி மதுரையை எரித்தபோது பசு, பத்தினிப் பெண்டிர், சிறுவர், முதியோர் தவிர்ந்த தீயத்திறந்தார் பக்கமே செல்க என்று அக்கினிக்கு ஆணையிட்டாள். தீயவர்களை மட்டும் அழிப்பதுதான் பண்டைத் தமிழரின் போர் நாகரிகமாக இருந்தது என்றும் நாம் படிக்கின்றோம். அந் நாகரிகத்தின் வாரிசான இக் கவிஞர் ஒரு சாராரின் தாக்குதலுக்காக முழுச் சமூகத்தையும் பழிப்பதந்த நாகரிகத்தின்பாற் பட்டதோ தெரியவில்லை. தமிழ்த்தாயின்பேரால் சிங்களமிருகம்பெற்ற சிறுக்கரை விழுங்குமாறு வங்கக் கடலைப் பணிக்கின்றார். எரித்துப் பொசுக்குமாறு தீக்கு ஆணையிடுகிறார்; பெற்ற தாயும் பற்றிய மனைவியும் கற்புடையவரானால் இது நடக்கவேண்டுமென்று ஒரு விபரீத பரீட்சையை முன்வைக்கிறார். கவிஞரது வர்க்கஉணர்வு, மனிதாபிமானம், மார்க்சியத் சித்தாந்தம் எல்லாம் இங்கு செயலற்றுப் போயின. ஆகஸ்ட் கலவரம் தேசிய இனப் பிரச்சனை பற்றியும், இனங்களின் விடுதலை பற்றியும் தீவிரமான சிந்தனைப் போக்குகளைத் தோற்றுவித்தது போல், புரட்சிகர முற்போக்குக் கவிஞர் என்று கருதப்பட்டவரை தீவிர இனவெறிக் கவிஞராக மாற்றியது போன்ற விபத்துக்களையும் தோற்றுவித்துத்தான் உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோளகம் கொக்கரிக்கும் ஒரு கோடையில்

பாலசூரியன்

மாய இருளில்
ஆந்தை உருட்டும் விழியை
பார்க்கச் சகியாது
கண்ணைக் கசக்குகிறேன்

நீயுந்தான்,
கண்ணைக் கசக்குவதுபோல்
ஒரு பரிவுக் கீறல்
என்னைப் பிளந்தது'

நிமிர்கிறேன்,
முன்னைய கோடையில், நீ
தந்துவிட்டுப் போன பதிவில்
ஏதோ கவ்விக் கிடப்பதை
என்னுள் உணர்கிறேன்.

தொண்டையில் சுருக்கிடும்
அழுங்கு உலகின்
'துயரம் தோய்ந்த
சுமைகள் நிறைப்தவன், தொடராதே'
என நான், பொய்யனுகி அழுத்தியதை
நிராகரித்து, மேலும்
என்சுவட்டுள் சுமையானுய்,

சோளகம் கொக்கரிக்கும்
அந்தக் கோடையில்
நீண்டபனை வெளிமருங்கில்
நடந்தபடி,
வெடிபறந்த சிரிப்பொலி
சிலவேளை
கடிந்த உன் சிணுசிணுப்பை
ஊடறுத்து, முறுகியபடி
ஒரு பனங்காய் விழ
வெருண்டு,
அணிற்பிள்ளை தாவும்
அப்போதும், நாம்
தலையைப் பொத்தியபடி
சிரித்திருப்போம்.

பின்னைய கோடையில்
சோளகம் விசிறி இறைத்து
அறையுள் படர்ந்த புழுதியை
தட்டிக் கொடுத்தபடி
தூரத்து பனையில்
வெருண்டு தாவித்
தோற்று விழும்
அணிலாரைப் பார்த்து, நெகிழ்கிறேன்.

வாடை பெயர்ந்து
முகிழ்த்த வசந்தத்தில், நாம்
சொரிந்து சருகாகி
எம்முள்,
மாயை துளிர்த்து
கேள்விக் குறியின் கருவானேம்.

www.tamilarangam.net

அ. ரவி
அ. ரவி
அ. ரவி
அ. ரவி

நூல் நிலையத்திலிருந்து வெளிக்கிடும் போது யார் கண்டார்கள் மழை பெய்யுமென்று. சிறிது நேரம் பார்த்த தன் பின்னர்தான் வெளிக்கிட்டேன். மேலே சிறிது நீலம் தந்த துணிவுடன் நூல் நிலையத்தின் வெளியில் வந்தேன். அந்தப் பிரமாண்டமான வெள்ளை மாளிகையின் உச்சி தடுத்த மேகங்கள்......! மழை கொட்டுமோ, கொட்டாதோ, தெரியாது. கொட்டலாமோ வேண்டாமோ எனத் தம்முள் குமைகின்றன. புழுக்கமோ அல்லது என் நடை வேகமோ, கழுத்தின் பின்னாலிருந்து வேர்வை சட்டைக்குள் வழிகிறது.

இடையில் அவன் மகேந்திரன்,

"என்ன...... ரியூட்டறிக் கோ.........?"

"ஓமோம்...... போனமுறையும் சீ, ரு, எஸ் தானே...... உனக்கென்ன மாதிரி?......"

"கம்மாரிசு...... நான் இப்ப படிப்பையே விட்டிட்டன்... ஒரு கடையிலை நிக்கிறன் ...... என்னவோ......"

அவன் பேசாமலிருந்து விட்டுத் திடீரெனக் கேட்டான்

"உன்ரை 'அது' என்னமாதிரி?......"

"அடடட...... உனக்குச் சொல்ல மறந்திட்டன்......

மேற்கோள் போலி

மேற்கோள் போலி
மேற்கோள் போலி
மேற்கோள் போலி

அது இப்பவும் என்னோடைதான் படிக்குது...... ஏதோ ரிசல்ட்...... சொன்னவள் ...... ம் ...... திறீ எல்லாம் ...... இப்பவும் சும்மா நடக்குது நீதான் இல்லை......"

"ஏதோ என்ரை விதி ......" மகேந்திரனுக்கு முகம் கொஞ்சம் கறுத்தது. அப்பவெல்லாம் எனக்கு உதவியாக இருந்தவன் மகேந்திரன் தானே......

★ ★ ★

அவளைத் திரும்ப சந்திச்சது எப்ப?.........அண்டைக்கு யாழ்ப்பாணத்திலை......

ஏப்பிரல் ரெஸ்ற் முடிஞ்சாப் பிறகு எப்ப அவளைச்சந்திப்பன்......? கனவுகள் ...... நினைவுகள் ...... எல்லாம் அவள் ரிசல்ற்றும் வந்திட்டுது. ரெஸ்ரிலை கோட்டை விட்டதும், இவளாலையோ?... இவளைச் சந்திச்ச பாடில்லை. என்ரை மனசுக்குள்ளை ஏதோ அரிச்சுக் கொண்டு......

உன்னை நான் காணவே மாட்டேனா? அட்ரசைக் கேட்கவும் வீட்டிலை பத்தினித் தன்மை பறந்து விடும் எண்டு நினைச்சு ......

நீ அங்கை என்ன செய்யிறாய்? என்னை யோசிச்சு...... அல்லது எவனிட்டையோ (எந்தக் கமலஹாசனிட்டையோ) மனசைக் குடுத்து......

நான் இங்கே அறைக்குள் இருந்து, பழைய நோட்சுகளை புரட்டேக்கை' அப்ப சின்னத்தம்பி வாத்தி நோட்ஸ் சொல்ல உன்னைப் பார்த்துக் கொண்டு வரிதப்பின எழுத்துக்கள் ...... வழிதப்பிய எழுத்துக்கள்...... எங்கோ செல்லும் கிறுக்கல்கள்......

நீ உங்கு படிக்கிறாயா? உன்ரை ரிசல்ற் என்ன? கம்பசுக்கு என்ரர் பண்ணுவியா?

உன்னோடை திரியுங்களே அதுகள் எப்படி? அதுகளாலை நான் எவ்வளவு கரைச்சல் பட்டனான்......

அண்டைக்கொருநாள் ரவுனிலை ஒருத்தி. உன்ரை அந்த நீலச் சட்டை - வெள்ளைப் பூப்போட்ட அந்தச்சட்டை போட்டுக்கொண்டு (உன்ரை ஒவ்வொரு சட்டையும் நான் வர்ணிப்பேன் அவ்வளவுக்கு நான் உன்னிலை) போகேக்கை நீ எண்டு நினைச்சு வலு சந்தோசமாய் அவளை அண்மிக்க அவள் வேறை ஆரோ எண்டு தெரிஞ்ச உடனே வந்த ஆத்திரம்...... அவளைத் திட்டத்தான் என்னாலை முடிஞ்சுது. இதெல்லாம் உனக்குத் தெரியுமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏதோ தேவைக்காக அண்டைக்கு ரவுனிற்குப் போனேன். பஸ் ஸ்ராண்டிலை அவள் - அவளேதான் வந்து கொண்டிருந்தாள். சிவப்பில் சிரித்தாள். எனக்குள் அதிர்ச்சி, ஆச்சரியம், வியப்பு, ஆனந்தம்......

விபரிக்க முடியாத ஏதோ ஒன்று - நெஞ்சில் அடைப்பது போல.........

அடிவயிற்றின் ஒரு பகுதியிலிருந்து கனமான பொருள் மெல்ல உருண்டு வாயின் நுனிவரை வந்துவிட்ட கேவல்.........

'உங்களுக்கு என்ன ரிசல்ற்?...'' அந்த அந்தகாரச் சூழலில் எதை யாவது கேட்டு வைக்க வேண்டுமென்று கேட்டுவைத்தேன்.

''திரும்பவும் ரியூட்டறிக்குப் போகவேணும......''
சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

★

எல்லா இலக்கியத்துக்கும், கலைக்கும் ஊற்றுக் கண் எது? தத்துவார்த்த வடிவங்கள் என்ற வகையில் இலக்கிய, கலைச் சிருஷ்டிகள் மனித மூளையில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பிரதிபலிப்பின் விளைவுகளாகும். புரட்சிகர எழுத்தாளர்களினதும் கலைஞர்களினதும் மூளைகளில் மக்களது வாழ்வின் பிரதிபலிப்பின் விளைவுகளாகும்.

— யெனன் கருத்தரங்கில் மா ஓசே-துங் —

★

இவளுக்கு என்னைக் கண்டதில் பரமதிருப்தியோ?

"நானும் உதே நிலைதான்"

அவள் தன்னுடைய ரிசல்ற்றைச் சொன்னாள். நான் என்ரை ரிசல்ற்றைச் சொன்னன்.

அவளைக் கண்டதில் இந்த உலகையே வெற்றி கண்டது போல...... அவளை இப்படியே இழுத்துக் கொண்டு ...... நகரத்தின் எங்காவது ஒரு மூலையில் சன சஞ்சாரமற்ற இடத்தில் ...... வானத்து நட்சத்திரங்களை எண்ணலாமா......?

''நான் முதலாந் திகதி தொடக்கம் பழைய ரியூட்டறிக்கே போகப்போறன். அங்கை யெண்டால் கரைச்சல் இல்லை......''

''நானும் எங்கை எண்டாலும் போகவேணு மெண்டு தான் யோசிக்கிறன்......''

''அப்படி யெண்டால் அந்த ரியூட்டறிக்கே வாருங்களேன்...... அவள் கேட்டாள்.

மீண்டும் இணைவதற்கு நல்ல சந்தர்ப்பம்.

''வேறை என்ன...... உங்களைக் கண்டது எனக்கு நல்ல சந்தோசம்......''

அவள் புன்னகைத்தாள்.

எனக்கு அங்கை எந்த நேரமும் உங்கன்ரை நினைப்புத் தான் எண்டு சொல்லுவோமோ?

''உங்கன்ரை மற்ற (f) பிறன்ட்ஸ் எல்லாம் என்ன மாதிரி? ரிசல்ற்றுக்கள்......''

''மாலாவைத் தவிர மிச்ச எல்லாருக்கும் அவ்வளவு ரிசல்ற் சரியில்லை......''

ஏதோ சொல்லிக் கொண்டு போனாள்...... அன்று வீட்டில் இருளில் எதையோ தேடினேன். வெளிச்சமே வெறுத்தது. இருள் எனக்கு மிக சௌகரியமாக...... அன்றைக் கென்று இருள் இன்பம் நிறைந்ததாக......

★ ★ ★

ரியூட்டறிக்குள் அவள் நின்றாள். பல பழைய முகங்களும் சில புதிய முகங்களும்...... என்னைக் கண்டவுடன் டிரெக்டரின் விஷமச் சிரிப்பு 'நீ பாஸ்பண்ணவில்லையா?' என்பது போல......

ரியூட்டறி பழைய மாதிரியே...... வாங்குகள்...... மேசைகள்... கூரைப் பலகைகளில் சிவகுமார், மனோகரன் பெயர்கள் ஆங்கிலத்தில் இன்னும் பழைய மாதிரியே சிரித்துக்கொண்டிருந்தன. அந்தக் கடதாசிப் பூமரத்தின் பூக்கள் இன்னும் வாடவில்லைத்தான். பச்சை இலையே தெரியாமல் ஒரே சிவப்பாக...... எனது கண்கள் நிலைக்குத்திப் பார்க்கின்ற அந்தப் பாம்புபோல் வளைந்த கொப்புக்கள்......... இன்னும் அசையவில்லை. அரண்டு அணில்கள்...... சிதறும் பூக்கள்... மிக நெருக்கமாக......ம்......

எல்லாமே பழசு...... நாங்களும் தான்......அவளது பார்வை... பழசாக இருந்தாலும் மிக இனிமையாக......

மனச்சாட்சி குத்துகிறது.

''தம்பி...... இந்த முறையாவது...... நாங்கள் உனக்காக எவ்வளவும் செலவழிக்கத் தயார்...... நீதான் படிக்கவேணும்...... நீ நல்லா வாழ்ந்தால் தான் எங்களுக்கும் மதிப்பு......''

www.tamilarangam.net

அம்மா சொல்றது எனக்குப் புரியுது......படிக்கவேணும். இந்த முறையாவது படிச்சுப் பாஸ்பண்ணவேணும் - என்னுள் வைராக்கியம், அடுத்த நாள் ரியூட்டறியிலே அவளைக் கண்டவுடனே......... நீ ஒரு ஏழரைச் சனியன் மாதிரி.........!

நான் இப்பவெல்லாம் முன்னுக்குத்தான் இருக்கிறது. முன்னுக்கு இருந்தால் படிக்கலாம். வாத்திமார் சொல்றதும் சுலபமாக விளங்கும். முந்தியெண்டால் பின்னுக்கு இருந்துகொண்டு......... வாத்திமார் சோக்கால் கீறுகிறது...... எழுதுகிறது ...... எல்லாம் வெள்ளைப் புள்ளிகளாய் .... வெள்ளைக் கோடுகளாய் .... நர்த்தனமாடும்.

வெள்ளைப் புள்ளிகள் .... கறுப்புத்திரள் .... நீலம்......... பச்சை. சிவப்பு, ஊதா சட்டைகள் ...... எனக்கு மிக அருகில் இருப்பதுபோல ...... கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருப்பதுபோல......

அவைகள் யாவும் எனக்குள் இருக்கின்றதா, அல்லது நான் அதற்குள் இருக்கின்றேனு?

கனவுகளே எனது காலமாய்க் கழியும்.
கழுத்தை வளைத்துப் பிடித்த பாம்புகள் -
-குரல் வளையை நெரிக்கும் கயிறு
யாருக்கு யார் பாம்பு - யார் கயிறு?

சுப்பர் படிப்பிக்கேக்கை தான் எனது கனவுகள் அனேகமாய்க் கலையும். அந்தப் பாடம் அவள் எடுக்கிறேல்லை.

அவர் மேற்கோள் போலிக்குத் தந்த உதாரணம்

"A என்பவ்ன் B இற்குக் கூறினன்" 'நேற்று C என்பவன் கடவுளுடன் கதைத்தான்' அப்பொழுது B கேட்டான் "அதை நீ பாத்தியா?" A, "இல்லை நான் பார்க்கவில்லை. ஆனல் கடவுளுடன் கதைத்தவர்கள் பொய் கூறமாட்டார்கள்."

★ ★ ★

எல்லாவற்றையும் நம்பி நான் இருப்பதாக என்னை நம்பி ஒன்றும் இல்லாததாக.........

என்னை எல்லாரும் வெறுக்கிறார்களோ? அவள் என்னை வெறுத்தது போல் பார்வை - அதனல் எல்லாரும் என்னை வெறுத்து விட்டார்களோ என்ற நினைப்பு.

நான் ஏன் சித்திரவதைப் படுகின்றேன்.? என்ன குற்றம் செய்தேன்.?

எனக்கென்று நானே ஒரு வரம்பு அமைத்து வேலி - போட்டு......... மாடுகளைத் துரத்த வேண்டும்.

உனது சிரிப்பு இதமாக, குளிர்ச்சியாக இருக்கிறது. ஏன் லதா தொடர்ந்து சிரியன்.........!

லதா, உனக்காக நான் ஊரிலை பலபேரை மறந்திட்டன். நந்தினி, நிர்மலா ரேணுகா......... இவையளையெல்லாம் நான் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

நீ.........? — திருந்தமாட்டாய்.

அண்டைக்கு நீ அவனோடை அந்த மூலையிலை கதைச்சுக்கொண்டு நிக்கேக்கை .... சிரிப்பு......... கும்மாளம்.........

நெஞ்சிலை ஆணி அறைந்தது போல.........

இந்த உலகமே என்னைக் கை விட்டு விட்டு ஓடிவிட்டது மாதிரி.........

தண்டவாளச் சோகங்களோ.........?
எனது கால்கள் கட்டப் படுகின்றன.........
கைகள் பிணைக்கப் படுகின்றன.........
முகத்தில் பெரிய கறுத்த திரை.........
அறுத்தெறிவேன் - வெகு விரைவில்!

நாங்கள் நிறையத் தியாகங்கள் செய்கின்றோம்.

தியாகங்களே எங்களை கழுவிலேற்றி விட்டால்.........?

பலிபீடம் என்று எனக்குத் தெரிவது உனக்கு பரிசுத்த இடமோ?.........

குமரன் மாஸ்டர் விடுகின்ற பகிடிகளுக்கெல்லாம் நீ முந்தி பெரிதாகச் சிரிப்பதுண்டு. எங்களுக்கும் அடக்கமுடியாத சிரிப்புத்தான். ஆனல், இப்பொழுது எல்லாம் நீ சிரிப்பதில்லை, ஏன்? 'கற்பு' உடைந்து விழுந்து விடும் என்கிற பயமா?

மகேந்திரன் இருந்தால் ஒத்தடமாக இருப்பான்.

"பெண்களை நம்பாதை......... அவர்கள் தங்கள் உடுப்புகளை மாற்றுவதுபோலை குணங்களையும் அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பார்கள்........." மகேந்திரன் அடிக்கடி சொல்லுவான்.

"ஏன் உங்கன்ரை (F) பிரென்ட் வரேல்லை?"

www.tamilarangam.net

லதா மகேந்திரனைக் கேட்டாள்.

"ஆரைச் சொல்லுறியள் ....?" மகேந்திரன் கேட்டான்.

"வேறை ஆரை.........? அவரைத்தான்.........."

"அவனோ......... தெரியேல்லை ஏதன் வேலையாக்கும்.. ......"

"இப்படி ஒழுங்கா வராட்டி படிக்கமுடியாதெண்டு சொல்லி விடுங்கோ ...."

"அவனைப்பற்றி உங்களுக்கேன இவ்வளவு கவலை.........."?

"ஏன் இருக்கக் கூடாதே?........." சொல்லி விட்டு, சிரித்து விட்டு. ஓடிவிட்டாள்.

மகேந்திரன் இதை என்னிடம் சொன்னதன் பின்னர் எனது வரவு மிக ஒழுங்காக இருந்தது. கனவும் வளர்ந்தது.

மகேந்திரனும் போய் விட்டான். நான் தனிய-

மிகப் பெரும் சோகம்!.........

மகேந்திரன் இருந்தால் சில சாதனைகளை மேற்கொள்ளலாம்—எங்கன்ரை ஆண்மைகளை நிலைநாட்டலாம்.

ஏன், நானே எனக்கு ஒத்தடமாக......

என்னுள் உணர்ச்சிகள் ஆர்த்தெழுகின்றன. முன்னையைப் போல் நீ இல்லை என்கின்ற உண்மை இப்பொழுது தான் எனக்குப் புரிகின்றது. நான் ஒருக்காலும் மாறவில்லை. ஆனால் இனி மாறப் போறன்...... நான் வளர்ந்திட்டன்......

பெரிய மழை என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது. இவ்வளவு நாளும் ஓடி ஓடித் தப்பினேன் - இனி நனையப் போறன்.

ரணமாயிருந்த புண் ஆறிக்கொண்டு வருகிறது. ஆனாலும் தொடர்ந்தும் மருந்தை அப்பிக்கொள்ளப் போகின்றேன் - அதனது கறுத்த வடு நீங்குமட்டும்.

"எக்கனமிக்ஸ் கொப்பியை ஒருக்காத் தாங்கோ...... நான் நேற்று வரேல்லை......"

என்ரை எழுத்து அவளுக்கு விளங்காது எண்டு எனக்குத் தெரியும்.

"என்ரை எழுத்து......" நான் இழுக்கின்றேன். எனக்கும் கொடுப்பதில் உள்ளூரச் சந்தோசந்தான்,

"அதெல்லாம் எனக்கு விளங்கும்....., நீங்கள் தாங்கோவன்..."
"..........."

"நீங்கள் பயப்பிட வேண்டாம்...... நான் நாளைக்குக் கொண்டு வந்து தந்திடுவன்......"

"அதுக்கில்லை......" நான் கொப்பியை எடுத்துக் கொடுக்கின்றேன்.

சிறிது நேரம் என்னைப் பார்த்துக்கொண்டு நின்றவள் பின்னர் புன்னகைத்தாள்.

அப்படியெல்லாம் இருந்தவள் இப்ப எப்படியெல்லாம் மாறிப் போய் விட்டாள்.

"நேற்று ஏன் நீங்கள் வரேல்லை......?" எங்கேயோ போக இருந்தவளை கொக்கி போட்டு இழுக்கின்றேன்.

மிக ஆறுதலாகச் சொன்னாள்.

"எனக்குச் சுகமில்லை...... அதுதான் வரேல்லை"

நான் இறங்கிக்கொண்டு போறன்......

"அப்ப உங்களுக்கு நோட்ஸ் கொப்பி வேண்டாமோ.........?"

"நான் மாலதியிட்டை வாங்கி எழுதியிட்டன்......" முகத்தில் அறைந்ததுபோல.

"ஏன் நீங்கள் முந்தி மாதிரி என்னோடை கதைக்கிறேல்லை......?"

அர்த்தமேயில்லாத மிக நீண்ட மௌனம்.........அவளது கண்கள் மண்ணைத் துளைக்கின்றன.......

சிறிது நேரத்தின் பின்னர் என்னை நிமிர்ந்து பார்த்தாள். எனது கண்களின் சோகத்தைக் கண்டாளா?

"அப்பிடி யெல்லாம் ஒண்டுமில்லை...... எனக்கு நேரஞ்செண்டு போச்சு...... நான் வாறன்........."

எனது கண்களின் சோகத்தை அவள் காணேல்லை.

எப்பொழுதெனினும் இடைக்கிடை அபூர்வமாய் அவள் சிரிப்பாள். அதைத்தவிர அவள் வேறொன்றும் செய்வதில்லை.

முந்திய மாதிரி இப்பெல்லாம் அவள் நீலத்திலை சட்டைபோடுறேல்லை. பிறவுண் நிறத்திலைதான் அதிகமான சட்டைகள்.

நான் இப்பவும் நீலத்திலை தான் உடுப்பு......... அவன் தேவதாசிட்டை அதிகமாக இருக்கின்ற உடுப்புகளெல்லாம் பிறவுண் நிறம்!

அம்மா எனக்காகப் பெரிதாக ஆதங்கப்படுறா இப்பெல்லாம் நான் நல்லா மெலிஞ்சு போறதா அம்மா சொல்லுறா. என்ரை மெலிவுக்குக் காரணம் இவளோ?......

www.tamilarangam.net

இவள் தாற சோகங்களோ?......

அல்லர்ட்டி சாப்பாடுகள்...... காலநிலை...... இதெல்லாம் அவளுக்குத் தெரியுமா?

இப்பெல்லாம் நான் எதைச் செய்தாலும்! மிக மூர்க்கமாக-ஒரு வித உத்வேகத்துடன்தான் செய்வேன்.

எல்லாம் என்னை விட்டுக் கழண்டு விட்டதன் பின்னர் எனக்கேன் வீணையின் நரம்புகள்...... வயலினின் தந்திகள்.........புல்லாங்குழலின் துளைகள்.........

★ ★ ★

''கொப்பியைத் தாங்கோவன் ....நான் வைச்சிருக்கிறன்......'' பஸ்சுக்குள் அவள் இருக்கிறாள் நான் நிற்கிறேன்.

நான் கொப்பிகளைக் கொடுக்கின்றேன். அவள் தனது மடியில் தனது கொப்பிகளின் மேல் எனது கொப்பியை வைத்திருக்கிறாள்.

எனது கொப்பியைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாள் முகப்பில் எனது பெயரை வாசிக்கிறாள், என்னை நிமிர்ந்து பார்க்கிறாள். சிரிக்கிறாள். பின்னர் தலை குனிகின்றது.

எனது பெயரை முதன் முதலில் அவள் அறிந்ததே இப்படித்தான்.

எனது நல்லகாலம் - பக்கத்தில் இருந்த கிழவி எழும்பி இறங்குகிறாள்.

நான் அமருகின்றேன். அவள் தள்ளி இருக்கின்றாள் - அவள் இருந்த இடத்தின் சூடு இன்னும் ஆறவில்லை. நான் இருந்தவுடன் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

''என்ரை பெயரை அறிஞ்சிட்டியள் தானே...உங்கன்ரை பெயரைச் சொல்லுங்கோவன் ... ''

நாணம் படருகிறது. சொல்கிறாள் -

பஸ் மிக விரைவாக ஓடுகிறது. யார் றைவர்? எட்டிப்பார்க்கிறேன். பேரம்பலம்தான்.

முகத்தில்அமுக்கும் காற்றினால் சிதைவடைந்த மயிர்க்கற்றைகளை ஒருங்கு திரட்டி காதிற்குள் செருகுகின்றாள். கைகள் லாவகமாக இயங்குகின்றது.

''வேறை என்ன......சொல்லுங்கோவன்......''

''என்னத்தைச் சொல்லுறது......?'' கேட்கின்றாள்.

என்ன கதைப்பதன்றே தெரியவில்லை.........

எவ்வளவு கதைக்க இருக்கு ஒன்றும் தொண்டைக்கு வெளியாலை வருகுதில்லை.

இவள் அருகிலிருந்தாலே பெரிய நிம்மதி.

இணுவில் வந்துவிட்டது. சொல்லிவிட்டு இறங்குகிறாள்.

''இப்படி ஒவ்வொருநாளும் சந்திப்பம்......''

ம்...... இப்படியான காலம் எல்லாம் போய்விட்டது. இதெல்லாம் இனித் திரும்பி வராது,

அந்த பஸ்ஷுக்குள் அவள் நிற்கிறாள் எண்டு தெரிஞ்சிருந்தால் நான் ஏறியிருக்கமாட்டான். என்ன செய்யிறது. ரிக்கற்றும் எடுத்தாச்சு, பேசாமல் நிப்பம்......

ஒரு சீட் இருக்கிறது. போய் இருக்கிறன். யன்னலை அகலத் திறந்து விட்டேன்.

அவள் என்னைப் பார்த்தாள் - முறுவலித்தாள் ......பஸ்சும் வெளிக்கிட்டது.

முகம் முளுக்க ஒரே குளிர்மை. பனித்துகள்களை வாரியிறைத்தது போன்று......

நெற்றி மிக வெறுமையாக, தலைமயிர் தாளம் போட்டபடி, மயிர்கள் நெற்றியில் உருண்டன.

காற்று......நீதான் இந்த உலகில் நிஜமானது.

அவளைப் பார்க்கிறேன். அவள் என்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள் பழையதை நினைத்தால் போலும். எனது செய்கைகள் அவளுள் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கலாம்-

அலட்சியமாக அவளைப் பார்த்தேன்.

அவள் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டேயிருக்கிறாள் - சிரிக்கின்றாள்.........

எனக்கு எல்லாமே வேஷமாக... வெளிவேஷமாக... போலியாக... ஒரே பொய்யாக.........

நீ இப்படி எவ்வளவு பேதை.........?

அவளைப் பார்த்தேன். அவள் இன்னும் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் - சிரிக்கவில்லை. வினோதமாகப் பார்த்தாள். 'இவன் ஒரு புதிராக இருக்கிறானே' என யோசித்தாளாக்கும்.

காற்று............

எங்கேயோ ஆகாயத்தில் பறப்பது போல.........

நான் எல்லாவற்றையும் வெற்றி கொண்ட பூரிப்பு.........

நான் நானாக............

www.tamilarangam.net

இப்பொழுது தான் முயற்சிக்கிறேன்.........

மிக இயல்பாக வெளிப் படுகின்றேன்..........

இணுவில் வந்து விட்டது.

அவள் என்னைப் பார்க்கின்ருள். சிரிப்பமோ விடுவமோ என யோசிக்கின்ருள் - இறங்குகின்ருள்.

நான் அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். அவள் என்ன செய்தாலும் சரி என்பதுபோல்.

முன்னர் போல் நான் வழிந்து கொண்டிருக்கத் தயாராயில்லை,

சுண்ணுகம் கழிகின்றது. மல்லாகம் வந்துவிட்டது.

இரர்சையாண்ணை வீட்டிலை விட்ட சைக்கிளை எடுத்துக் கொண்டு அளவெட்டிக்குப் போகவேணும்.

இராசையாண்ணை வீட்டுக் கண்ணுடியிலை முகத்தைப் பார்க்கின்றேன்.

மேற்கோள் போலிக்கு......இல்லையில்லை போலி மேற்கோளுக்கு விடை கண்டு விட்ட பூரிப்பு. கடவுளைக் கண்டவர்களும பொய் சொல்லுவார்கள்.

அளவெட்டியிலை நந்தினி ரேணுகா, நிர்மலா ,இவையெளெல்லாம் ஒருமாதிரிப் பாப்பினம் போலை இருக்கு. 'இவனென்ன விசித்திரமாக இருக்கிருனே.'

நான் சைக்கிளை எடுத்தேன்.

வேகமாக - வெகு வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினேன்

சைக்கிளுக்கும் பிறேக் இல்லைத்தான்.........!

அன்பளிப்பு

த. திருநாவுக்கரசு
(பா. உ.)
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒலி,

ஒளி,

புகைப்படங்கள்.

அனைத்திற்கும்,

வட பிரதேசத்தின் சிறந்த வளம்மிகு ஸ்தாபனம்,

றெலெக்ஸ்.

ROLEX.

தொடர்புக்கு:-

றெலெக்ஸ்
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

றெலெக்ஸ் ஸ்ரூடியோ,
பண்டத்தரிப்பு.

நீங்கள் மில்க்வைற் தயாரிப்புகளுக்குத் தரும் ஆதரவின் பயன்

- வசதி, வாய்ப்பு, பயன் கருதி மரங்களை நடுதல்
- வீட்டுத்தோட்டம் விருத்தி செய்தல்.
- பனை வளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்.
- பசளைதரும் செடிகள் மரங்களை உண்டாக்குதல்
- ஊர்கள் தோறும் குளங்களை ஆளமாக்கி மழை நீரைத் தேக்குதல்.
- சனசமூக நிலையங்களில் வாசிக்க வழி செய்தல்.
- பக்தி நெறியில் பரமனைப் பணிந்து வாழப் பயிற்றுதல்.
- எல்லோரும் எல்லோருக்கும் சேவை செய்தல்.
- வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழி வகுத்தல்.
- எல்லோரும் யோகாசனம் பயில வைத்தல்.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.